கோவை முரசு

கோவை முரசு, வெளியீடு: ஆசிரியை S.P.மீனாட்சி அம்மாள்.....

அறிஞர். G. D. நாயுடு அவர்கள்.

மலர் 2
இதழ் 11

ஜனவரி & பிப்ரவரி 50

விலை 4 அணா.

சென்னை

கெயிட்டி & கிரௌன்

மற்றும் தென்னுடெங்கும் வெற்றிகரமாக நடைபெறுகிறது.

சிற்றுண்டி சாலை.

ஈரோடு ரெயில்வே ஜங்ஷனில்.

★

கோவை ஜில்லாவில் சௌத் இந்தியன் ரயில்வே கம்பெனியாரின் புதிய கட்டிடத்தில் பொதுஜன யாத்திரை வாசிகளின் சௌகர்யத்திற்கென்றே ஈரோடு ஜங்ஷன் 3, 4 நெ. பிளாட்பாரங்களில் நான் வெஜிடேரியன் லைட் ரிப்ரஷ்மெண்ட் ரூமில்
NON-VEGITARIAN LIGHT REFRESHMENT ROOM
மிலிடேரி உணவு பதார்த்தங்கள், டீ முதலியன

— கிடைக்கும் யாத்ரீயர்கள் கவனிக்கவும் —

★

Prop: T. P. அப்துல் ரஹிமான்.

★ நான்-வெஜிடேரியன் லைட் ரிப்ரஷ்மெண்ட் ரூம், ★

ஈரோடு சந்திப்பு

குமரன் மில்ஸ்

லிமிடெட்,

புதுப்பாளையம்—மேட்டுப்பாளையம் ரோடு,

கோயமுத்தூர்.

★

நாங்கள் 36, 60, 80, நெம்பர் பாவு நூல்

தயாரிக்கிறோம்!

இந்திய மூலதனம்-நல்ல டிவிடெண்ட்,

கல்வி, தொழில் அனுபவம் நிறைந்த

நிர்வாகம்

★

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் செகரட்ரீஸ்:

N. அப்புசாமி நாயுடு & Co.,

டைரக்டர்:

C. V. முத்துசாமி B. Sc.



டாக்டர் S. V. அப்பாச்சித் தேவர் L. M. P. அவர்கள்.

திரு S. V. அப்பாச்சித் தேவரவர்கள் சிறந்த மருத்துவப் பயிற்சி உடையவர். கோவை, நீலகிரி கூட்டுறவு செண்ட்ரல் பேங்கின் டைரக்டர், கோவை லோக்கல் கோ-ஆபரேடிவ் ஆனரரி காரியதரிசி கோவை ஜில்லா முக்குலத்தோர் சங்கத் தலைவர். பொது நலப் பணியில் ஆர்வமிக்கவர். ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட முக்குலத்தோர் மக்கள் கோவை மாவட்டத்தில் உள்ளனர். அவர்களின் ஏகப்பிரதிநிதியென திரு அப்பாச்சித் தேவரவர்களைக் கூறலாம். 1945ல் கோவை கோபால் பாக்கில் கூடிய முக்குலத்தோர் மகாநாட்டிற்குக் காரண கர்த்தராயிருந்தவர். முக்குலத்தோர் சங்கமூலம் மாபெரும் சமூக சேவை செய்து வருகிறார். அன்னாரின் சேவை போற்றற்பாலதே.

— ஆசிரியர்.

Telephone : 2894 Grams : "EVEREST"

HOTEL EVEREST

(PROPRIETOR: S. K. SUNDARAM J. P.)
1 & 2, POONAMALLEE HIGH ROAD, MADRAS 3.

MOUNT EVEREST
The Peak of Perfections

HOTEL EVEREST
The Perfect Boarding & Lodging House

Situated between Madras Central & Egmore Station and on Bus, Tram, Electric Train Route. Well Ventilated 130 Airy Rooms

Our Branch :

Luxury Type HOTEL D' MADRAS

Telegrams: **PROTECTION.**

தி பயனீர்

பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீசு: கோயமுத்தூர்.

★ நாங்கள் செய்துவரும் ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார் விபத்து. முதலிய இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களுக்கு அனுபவமும் செல்வாக்குமுள்ள ஏஜெண்டுகள் தேவை. ★

விபரங்களுக்கு எழுதவும்.

போன் 70 தந்தி: "ஸ்பின்னிங்"

ஸ்பின்னிங் அண்டு வீவிங்

கம்பெனி லிமிடெட்,

கோயமுத்தூர்.

மூலதனம் ரூ. 25,00,000

வசூலான தொகை ரூ. 20,76,900

டைரக்டர்கள் :

ஸ்ரீ வி. கோபால் நாயுடு
,, G. புருஷோத்தம நாயுடு
,, A. துரைசாமி நாயுடு
,, ஏ. வி. ஸ்ரீனிவாசலு நாயுடு
,, சி. ஆர். சதாசிவம்
,, ஆர். வி. லட்சுமைய நாயுடு
,, R. குருசாமி நாயுடு

கதிர்கள் 47,992. தறிகள் 384.

நூல் : 80 செ. வரை எல்லாவிதமான நூல்களும், பனியன் காரிகம், சலவை முதலிய எல்லா விதமான நூலும் கிடைக்கும்.

நெசவு : எல்லாவித ஜவுளிகள், உயர்ந்த ஷர்ட்டிங், லாங்களாத், கதர் துவாலைகள், வேஷ்டிகள், முதலியவை தயாரிக்கப்படுகின்றன.

சுதேச மூலதனம் தேசியத் தொழில்

தேசிய நிர்வாகம்

Agents & Secretaries: M/s R. G. S. Naidu & Co.,
Partners:

V. Gopal Naidu & A. V. Srinivasalu Naidu,

COIMBATORE.

V. R. A. MANICKA MUDALIAR,

ERODE.

கோவை முரசு ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்!
தாங்கள் நடத்தி வரும் கோவை முரசு என்ற சமூக சீர்திருத்த பத்திரிகை பலவற்றைப் பார்த்து மகிழ்ந்தேன். சமூகப்பணியே தேசப்பணிக்குத் திறவுகோல் என்பதற்கிணங்க சமூக முன்னேற்றத்தையூட்டும் அரும் பணியினை ஆற்றி வருகிறது. பல அறிஞர்களுடைய கருத்துரைகளும் மிளிர்கின்றன. சமூக சீர்திருத்தம், கல்வி பொருளாதாரம், விஞ்ஞானம், கலை, முதலிய பல பொதுப் பிரச்சனைகளும் இடம் பெற்றிருக்கின்றன. புத்தக வடிவில் பொலிவுடன் விளங்கக் காண்கிறேன். ஆகவே சமூக சீர்திருத்தத்தில் ஆர்வங்கொண்ட சமூகத்தலைவர்கள் ஆக்கந்தந்து இச்சஞ்சிகையை ஊக்குவிக்க வேணுமாய் வேண்டுகிறேன் நண்பரின் முயற்சியை பெரிதும் பாராட்டுகிறேன். எல்லாம் வல்ல இறைவன அருள்புரிவாராக.

இப்படிக்கு,

வி. ரு. அ. மாணிக்க முதலியார்.

தந்தி: 'வசந்தா' கோயமுத்தூர் போன்: நெ 25

வசந்தா மில்ஸ்

லிமிடெட்

ரிஜிஸ்டர் ஆபீஸ் : சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்;

R. K. ஷண்முகம் செட்டி & பிரதர்ஸ்

1934-ஆு கள்ளிக்கோட்டையில் நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்கமெடல் நற்சாட்சி பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல் :

20 நெ. முதல் 44 நெ. வரை ஒத்தை முறுக்கு, காரம், சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லாவிதமான ஜவுளி ரகங்களுக்கும்,

வேஷ்டிகள், லாங்கிளாத், டவல், சர்டிங், மல், கதர் தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கெட்டில் பேர் பெற்றது 600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்!

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்

செங்குந்தர் மஹாஜன சங்கம்.

கோவை ஜில்லா 28-வது செங்குந்தர் மகாநாடு.

1950-வருஷம் மார்ச்சு மாதம் 5-ந்தேதி விரோதி வருஷம் மாசி மாதம் 22-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு

திருப்பூரில் நடைபெறும்.

கோவை திரு. C. P. சுப்பையா முதலியார் அவர்கள் தலைமை வகிக்க இசைந்துள்ளார்கள்.

அது சமயம் திருவாளர்கள் திண்டுக்கல் P. K. ஷண்முகநாதன், B. A. B. L. மதுரை L. கிருஷ்ணசாமி பாரதி M. A. B. L., திருமதி லக்ஷ்மி பாரதி M. L. A. முதலானவர்கள் கலந்துகொள்வார்கள்.

நம் சமூக மக்கள் ஏராளமாக விஜயம் செய்து மகாநாட்டை சிறப்பிக்கக் கோரப்படுகிறது.

சுமார் ஆயிரம் பிரதிநிதிகள் வருவார்களென எதிர்பார்த்து எல்லா ஏற்பாடுகளும் செய்துவரப்படுகின்றன.

மகாநாட்டு டெலிக்கேட் கட்டணம் ரூ 1—4—0 முன்னதாகவே அனுப்பிவைக்கக் கோரப்படுகிறது. நன்கொடைகள் வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தலைமை,
செங்குந்தர்
மஹா ஜன சங்கம்.

தங்கள் அன்புள்ள,
S. K. இராமசாமி முதலியார்,
பிரசிடெண்டு
N. மாணிக்க முதலியார்,
காரியதரிசி.

உபசரணைக்கமிட்டி.

தலைவர்	திரு M- ஷண்முக முதலியார்	திருப்பூர்.
உப தலைவர்	T. வையாபுரி முதலியார்	,,
காரியதரிசி	K. சிங்காரவேலு முதலியார்	,,
உதவிக்காரியதரிசி	K. அப்பாவு முதலியார்	,,
,,	B. ராஜு முதலியார்	,,
பொக்கிஷதார்	R. திருமூர்த்தி முதலியார்	,,

குறிப்பு;— தயவு செய்து படுக்கை வசதிகள் தாங்களே கொண்டுவருவது உசிதம்.

உ

கோவை முரசுக்கு வாழ்த்து.

மாரில் மடந்தை மதிமுகம் புரையும்
வானவர் போற்றும் செந்தமிழ் நாட்டிடைக்
கொங்கு வள நாட்டின் மங்காப்புகழுறூ உம்
கோயமுத்தூர் என்னும் பதியிடை
சீரொடு பிறந்த சீரிய வெளியீடுக்
கோவை முரசெனத் தோன்றிப்புகழொடு
பல்வகைக் கலையும் ஒல்வக கரந்து
கல்வி நிரம்புலூஉ. பற்பல கட்டுரை
மண்டினிது சேரப்படிப்போர் யார்க்கும்
கண்டென விளிக்குஞ் செம்பொரு ளீந்தும்
நாட்டுப் பற்றும் நலம்பெறப் பரப்பியும்
பாட்டுங்கதையும் பலவுடன் பொலிய
முரசங் கொட்டி முறணினர் திருந்த
அரசியல் திருத்தம் சமூக ஒழுக்கம்
பண்டெழு பழக்கம் பலவுடனுயர்த்தும்
தொண்டுகள் புரியும், வண்புகழ் ஏடு
செப்புதற்கரிய சிறப்புடன் உலவிச்
செவ்வேள்நாளால் சீருடன் வாழ்க.

பெ. கா. சண்முகநாதன்.

PHONE
226

GRAM
"BULLION"



உத்திர
வாதமுள்ள

KR

சீல் பவுன்
தங்க நகைகள்



சிறந்த
வேலைப்பாடு



குறைந்த
கூலி

கிடைக்குமிடம்:-

கே. ஆர். அண் சன்ஸ்,

பெரிய கடை வீதி,
கோவை.

கோவை முரசுக்கு வாழ்த்து



C. N. Annathuarai, M. A.
EDITOR:
DRAVIDANADU,
KANCHEEPURAM.

சமூக சீர்திருத்தத்தில் ஆர்வம் கொண்ட நண்பர் மாணிக்கம் அவர்கள் நடத்திவரும் 'கோவை முரசு' எனும் செந்தமிழ் இதழ் நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும், சமூக முன்னேற்ற நோக்கத்தையும் ஊட்டும் அரும்பணியினை ஆற்றி வருகிறது.

பத்திரிகைத் தொழிலிலே உள்ள இன்னல்கள் பலப்பல என்பதை அறிந்திருந்தும் நண்பர் மிக்க ஆர்வத்துடனும், தக்கோரின் ஆதரவு கிடைக்கும் எனும் தன்னம்பிக்கையுடனும், கடமையைக்கலங்காது செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடனும், இந்த இதழை நடத்தி வருகின்றார்.

ஒவ்வோர் இதழிலும். பலதுறைகளைப்பற்றிய கட்டுரைகளைத் தொகுத்துத் தருவது, பொதுப்பிரச்னைகளை மக்கள் உணர உதவுகிறது. சர் சி. வி. இராமன், விஞ்ஞான வித்தகர் G. D. நாயுடு போன்றோரின் கருத்துரைகளை நாட்டு மக்களுக்கு எடுத்து வழங்கியுள்ளார்.

சமுதாயத்திலே காணப்படும் பல சீரழிவுகளைப் போக்கும் நோக்குடன், மக்களின் பொது அறிவை விருத்தி

செய்யக்கூடிய அரிய கட்டுரைகளையும், விமர்சனங்களையும், வெளியிட்டு பொதுநலத்தொண்டாற்றும் நண்பருக்குத் தமிழகம் பேராதரவு காட்டக்கடமைப்பட்டிருக்கிறது.

வெறும் பொழுது போக்குக்கு மட்டுமே தயாரிக்கப் படும் சில இதழ்களை போலன்றி, பொது அறிவும், புத்தறிவும் பரவ வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தயாரிக்கப்படும் இந்த இதழை ஆதரித்து, நண்பரின் முயற்சி மேலும் நல்ல பலன்களை மக்களுக்குத் தரும் நிலையை ஏற்படுத்த, அறிஞர்களும், செல்வர்களும், முன் வர வேண்டுகிறேன். ஆதரவாளர்களின் துணை இத்தகைய அரும்பணிக்கு முன்னம் கிடைப்பது அரிது. எனினும் விழிப்பும், எழுச்சியும், அதிகரித்துக்கொண்டு வரும் இந்நாளில், பழையநிலை மாறி. தக்க காரியங்களை ஆதரிக்கும். தன்மை பெருகுவது கண்டு மகிழ்கிறோம், தமிழகம் புதிய ஆர்வத்துடன், இத்தகு இதழ்களை ஆதரித்து வளர்க்க வேண்டும். ஆதரவு பெருகப் பெருக, இதழின் வனப்பும் அதிகரிக்கும். ஆரம்ப நிலையிலேயே, இதழ், கவர்ச்சிகரமான முறையிலேயே, அச்சிடப்பட்டு புத்தக வடிவில் பொலிவுடன் விளங்கிடக் காண்கிறோம். இந்த இதழை மேலும் ஆதரிக்கவேண்டுமென்று தமிழார்வம் கொண்டவர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். நண்பரையும் பாராட்டுகிறேன்.

அன்பன்,

அண்ணாதுரை.

"கோவை முரசு"

சூலூர் P. O. (கோவை ஜில்லா)

சந்தா விபரம்.

உள்நாடு தனிப்பிரதி	0—4—0	ஆண்டு சந்தா ரூ.	3—0—0
வெளிநாடு ,,	0—5—0		4—0—0

விளம்பரம்.

வெளி அட்டை ரூ	100-0-0	உள் அட்டை ரூ	75-0-0
சாதா பக்கம்	50-0-0	அரை பக்கம் ரூ	25-0-0

கோவை

— முரசு —

மலர் 2	ஜனவரி 50.	இதழ் 11

விஞ்ஞான விற்பன்னர்.

அறிஞர்கள் மட்டும் இவ்வுலகைத் தனக்கடக்கமாக்கிக் கொள்வது ஏன்? அவர்களும் எல்லா மனிதர்களைப்போல் பிறந்து இறப்பென்னும் முடிவுக்கு வருகிறவர்கள் தானே? சந்திரனை, சூரியனை, அறிஞர்களுக்கென சலுகையுடன் தோன்றியோ, தோன்றாமலோ, இருப்பதில்லையே. மனிதர்கள் அமைத்த அமைப்பில்தானே அவர்கள் மாறுதலான வாழ்வை அடைந்துள்ளார்கள்? இப்படி பலப்பல கேள்விகளை முன்னுக்குப் பின் முரணாகத் தோன்றலாம். தோன்றுவதும் இயற்கை. தடை செய்ய முடியாது.

அறிஞர்கள் வாழ்க்கையே ஓர் கலை. அவர்கள் வாழ்வு பிறர்க்கு அகண்டதாகவும் அகலமானதாகவும், ஆழமானதாகவும் தென்படும். அகண்ட, அகலமான, ஆழமான, உயரமான, அவர்கள் வாழ்க்கை வரலாற்றை அறிய வேண்டியது நமது கடமைகளில் ஒன்றாம் ஏன்? அந்த மேதைகளின் வாழ்க்கை மன்பதைக்கு வழி காட்டியாக அமைத்தாலென்க. அறிஞர்கள் அறிவித்த வழி என்ன? அதனால் அவர் வாழ்விற்கண்டதென்ன? அவர் வாழ்வும், போக்கும் சமூகத்திற்கு என்ன வகையில் பயன்பட்டன. இவைபோன்ற கேள்விகளுக்கு அறிஞர் தம் வாழ்வே சரியான பதிலளித்திருப்பதால் அவற்றை மனிதகுலம் அறிந்து அவ்வாழ்வை ஒவ்வொரு தனி மனிதனும் அடைய வேண்டியது இன்றியமையாதது.

நம்மருகே யாருக்கும் அறிஞர் ஒருவரின் வாழ்வை ஆராய்ந்தால் நாம் அதிசயமும், வியப்புவடைவோமென்பது உறுதி.

அறிஞர் G. D. நாயுடு அவர்கள் உயர்தரக் கல்லூரி காணுதவர் சூலூருக்கடுத்த கலங்கலென்னும் சிற்றூர் சிறக்கப் பிறந்தவர். பள்ளிப்பருவத்திலேயே அவருக்குத் தான் ஒரு சிறந்த யந்திர வித்தை வல்லவராதல் வேண்டுமென்ற விருப்பம் மிகப்படைத்தவர். பிள்ளைப்பருவத்தில் தோன்றிய அவ்விருப்பம் நாளும், நாளும் வளர்ந்து இன்று உலக விஞ்ஞான விற்பன்னர்களில் ஒருவராகும் நிலையைத் தானுகவே, தன் முயற்சியாலேயே உண்டாக்கிக் கொண்டவருமாவார்.

மேனுடு முழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்து ஆங்கு நடந்த விஞ்ஞான பரீக்ஷைகள் பலவற்றிலும் தேர்ந்து உலகம் மருளும் தன்மையில் இன்று அவரது கலைத்திறன் விளங்குவது குறிப்பிடத்தக்கதாகும். "முயற்சி திருவினையாக்கும்" என்னும் பழமொழிக்கொப்ப கல்லூரி காணுத கலைஞர் இன்று ஆங்கிலத்தில் மணிக்கணக்காக நகைச்சுவையும், பொருட் சுவையும், மிஞ்சும் முறையிலே நாவண்மை படைத்த சீலராகவும், பொருளாதாரம், விஞ்ஞானம், கலை, அரசியல், விவசாயம், முதலியவற்றிலே ஆழ்ந்த கருத்தோடு (பல அறிஞர்கள் காணுத நூதன கருத்தோடு) சிறந்த முறையிலே நன்கு பேசுவார்.

சொல்லோடு செயலிலும் நேரிதாக நிற்கும் நெஞ்சுரம் படைத்தவர். எவர்க்கும் அஞ்சாத நெஞ்சுரம் படைத்தவர் கொண்ட கொள்கையை கணமும் மாற்றுர். வீர நெப்போலினைப் போலவும், இரும்பு நெஞ்ச லெனினைப் போலவும், உறுதியான வைர நெஞ்சங் கொண்டவர்.

அமெரிக்காவிலே நமது அறிஞர் பேச்சைக் கேட்க 15000 பவுன் தந்தனர்; நமது நலிந்த நாட்டிலே அவரது கலைத்திறமை வாய்ந்த பேச்சைக்கேட்க அவ்வளவு அறிவாளர்கள் உண்டா? அறிவிற்கும், ஆற்றலுக்கும், மதிப்புத் தராத நாட்டிலே அறிஞர்களைப் பற்றிய கவலை ஏது?

நமது G. D. நாயுடு, போன்ற அறிஞர்கள் வட நாட்டிலே தோண்றியிருந்தால் ஹென்றி போர்டுகளின் கார்கள் இந்த நாட்டில் காண முடியுமா? உண்மையாகக் கூறினல் G. D. அவர்கள் ஒரு ஹென்றி போர்டை விட ஒரு Marcony யை விட எவ்விதத்திலும் தாழ்ந்தவரல்ல; சந்தர்ப்பம் கிடைத்தது டாட்டாவிற்கும், பிர்லாவிற்கும், பஜாஜிற்கும், டால்மியாவுக்கும், பெயர் கிடைக்க.

தென்னட்டில் தோன்றிய பாவத்தினல் அறிஞர் G. D. நாயுடு அவர்களின் அறிவுச் சேவையையும் ஆற்றல் பண்பையும் உணராத அரசாங்கம் அவரது முற்போக்கு சக்திகளுக்கெல்லாம் முட்டுக்கட்டையிட்டு அவரது மதிப்பைக் குறைத்து வருகிறது.

பெண் சிசு பிறந்தவுடன் வேறு நாட்டிற்கு விபசாரியாகப் போய்விடுவாலென்ற முட்டாள் தனத்தால் சின்னஞ் சிறு சிசுவின் காலில் இரும்புச் செருப்பை அணிவிப்பார்கள் சீன அரசாங்கம். அதுபோல நமது கருணை மிகுந்த காங்கிரஸ் சர்க்கார், இன்டஸ்ரியலை இன்னதென்றறியாத இந்துமத சர்க்கார், அறிஞர் ஜி. டி அவர்கள் சிந்தனையில் மலரும் அரிய முயற்சிக்கு ஆதரவு தராது அழிக்க முன் வருகிறது.

காலம் மாறுதலுடையது. உண்மைக்கும் அறிவிற்கும் ஒரு நாள் இடமுண்டு. மறுப்பதற்கில்லை ஜி. டி. நாயுடு அவர்களின் மேதையை ஒரு நாள் தமிழகம் நிச்சய மணுபவிக்கும். அறிஞர் அண்ணு கூறியதை தமிழகத்திற்கு இதுபோது நினைவூட்டாமலிருக்க முடியவில்லை.

ஏ தாழ்ந்த தமிழகமே! அறிவற்ற அசட்டு கொள்கை கொண்ட நாடே! கலைஞர்களைக் கண் கொண்டு பாராத மூட நாடே! உணர்ச்சியற்ற தமிழ் நாடே! வீறு கொண்டு எழு! விற்பன்னர்களைப் போற்று!! உண்மைக்கு வழி விடு!! உயர்வுக்கு மதிப்பிடு!!

அறிஞர் அண்ணு கூறிய அறிவுரைகள் அறிஞர் G. D. நாயுடுபால் காய்ந்த கூட்டத்தினருக்கு விருந்தளிக்கும்.

வாழ்க கலைஞர்கள்! வளர்க விஞ்ஞானம்!!

★ மலர்ச்சி பெறும் தமிழ். ★

அறிஞர் R. K. சண்முகம் அறிவுரை.

"சமஸ்கிருத நூல்கள் தேவ மயமாய் உள்ளன, அவற்றில் மனிதர்களுக்கு இடமில்லை. புராணங்கள் பற்றியே அவை கூறுகின்றன. ஆனல் அகநானூறு, புறநானூறு கலித்தொகை போன்ற பண்டையத் தமிழ் இலக்கியங்களில் இயற்கையின் அழகு காதல், வீரம் ஆகிய மூன்றுந் தாம் இடம் பெறுகின்றன.

என்று சென்னை பச்சையப்பன் கல்லூரி கலை விழாவில், அறிஞர் ஆர். கே. சண்முகம் அவர்கள் ஆற்றியிருக்கும் தெளிவுரை, உண்மைக்குப் புரிந்து பேசுவோரின் உள்ளங்களில் மகிழ்ச்சி வெள்ளத்தைப் பாய்ந்தோடச் செய்வதாக இருக்கின்றது. அவரது அந்த உரையில் ஆழ்ந்த அறிவு, தெளிந்த சிந்தனை, உண்மை நிலை, உயரிய பண்பு இவையனைத்தும் ஒன்றோடொன்று பிணைந்து கிடக்கின்றன. அப்படிப்பட்ட அந்த உரையை ஆற்றியிருப்பதன் மூலம், அவர் அறிஞராக மட்டுமில்லாமல், அத்த அளவிற்கு அச்சந்தவிர்த்துத், துணிவுடன், தான் கொண்ட உண்மைக் கருத்தை எடுத்துச்சொல்லும் ஆற்றல் படைத்த வீரராகவும் காட்சியளிக்கிறார். அந்த துணிவு, அவருக்கு ஏற்பட்டதற்காக நமது பாராட்டுதல்!

சமஸ்கிருதம் மனிதனுக்கு தேவையற்றதைக் கொண்டிருக்கிறது; தமிழ் — மனிதனின் உள்ளத்தை கொள்ளைகொண்டு, வாழ்வின்பத்திற்கு இன்றியமையாத மெருகு ஏற்றுவனவாக விளக்கும் அழகு, காதல் வீரம், இம் மூன்றையும் உடையது. இந்தக் கருத்தை, அறிஞர் ஆர். கே. சண்முகமும், அவர் போன்ற ஏனையோரும் மக்களிடத்தில் நெடு நாட்களுக்கு முன்மே வலியுருத்தத் தொடங்கியிருப்பார்களாயின், தமிழகம் இது நாளில் தன்னிகரில்லா நாடாகக் காட்சியளித்திருக்கும்.

செத்த சமஸ்கிருத மொழிக்கு உயிரளிக்கும் முயற்கியில், வைதிக ஆதிக்க வகுப்பினரும், அவரடி தொழுது வாழும் சில சவுண்டிகளும் இங்கக்காலத்தில் ஈடுபட்டுள்ளனர். வைதிக ஆதிக்க வகுப்பினரின் முழு முயற்கியும் சமஸ்கிருதத்திற்கு உயர்வு அளிப்பதிலும், சமஸ்கிருதத்தை நாட்டு பொது மொழியாக ஆக்குவதிலும், அதனை அரசியல் மொழியாகச் செய்து விடுவதிலும் செலுத்தப்பட்டு வருகின்றது. ஆதிக்க வகுப்பைச்சேர்ந்த உயர் நீதி மன்ற நீதிபதியிலிருந்து, 'பிணம்தூக்கி' வரையில் சமஸ்கிருதம் பற்றியும், அதன் உயர்வு பற்றியும், பேசிக்கொண்டு வருகின்றனர். வைதிக ஆதிக்க வகுப்பினரின் ஏடுகள் அவைகளில்' நச்சு நீர்' பேச்சுக்கு அன்றாடம் விளம்பரம் கொடுத்து, மக்களின் பைந்தமிழ் உள்ளத்தில் அதனைப்பாயச் செய்கின்றனர். 'சிறிய திருவடி' யாகப் பணியாற்றுவதில் வல்லவபரான மந்திரி மாதவமேனனர் சமஸ்கிருத குழிப்பிள்ளையை மடியேந்தி, நாட்டில் வலம் வந்த வண்ணம் இருக்கிறார். இப்படிப்பட்ட நிலையில் அறிஞர் சண்முகம், பசுந்தமிழ்ப் பைஞ்சுனையின் தன்மையையும், 'சமஸ்கிருத நச்சு நீர்ப்பொய்கையின்' தன்மையையும் உணர்த்தி,

சீரிய சொற்பொழிவாற்றியிருப்பது உடைந்த தமிழர்களின் உள்ளத்தை எஃகு உள்ளமாக ஆக்குவெதொன்ருகும்.

தமிழின் தனிப் பெருமையைப் பூரிப்புடன் அவர் கூறுகின்ருர். "கிரேக்கமொழி லத்தீன் ஹீப்ரு, சமஸ்கிருதம், தமிழ் ஆகியவை உலகின் உன்னத மொழிகள் ஆனல் இன்னும் உயிருடனிருப்பது தமிழ் தமிழ் மொழி ஒன்றுதான் இது தமிழ் மொழியின் தனிப்பெருமை' என்று இத்தகைய கருத்து ஏனைய தமிழக அறிஞர்களின் உள்ளங்களினின்றும் எதிரொலிக்க வேண்டும். அதனைக்கேட்டு இன்பக் கேணியிற் தமிழ்மக்கள் குளிக்கவேண்டும். அதுகண்டு நாம் களிக்கவேண்டும். வீம்பு பேசித் திரியும் சவுண்டிகளுக்கு இது போன்ற உரைகள் சவுக்டிகளாக இருக்கும் - இருக்க வேண்டும்.

மேலும் அவர் இசையைப் பற்றிக் கூறும்போது,

"கர்நாடக சங்கீதம் என்ருல் தமிழ் சங்கீதமே என்பதானல், தமிழ் பாட கர்னடக சங்கீதம் எற்றதே ஆனல் கர்னடக சங்கீதத்தை தமிழில் பாட முடியாதென்ருல் அந்தச் சங்கீதம் நமக்கு வேண்டாம். அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டாம்.''

என்று அழுத்தந் திருத்தமாகத் தெளிவுப்படக் கூறியிருப்பதும், தமிழ்ப் பண்பற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டும் ஏன்று வற்புருத்தியிருபதும் தமிழிசை வளர்க்கப்பட வேண்டிய இன்றிமையாமையை உணர்த்துகின்றன. ஆதிக்க புரியினர் வசம் அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கும் இசை உலகம் அந்த அளவுக்குத் திரும்புமா? திரும்பும் தமிழிசைவானர்கள் துணிவுடன், உண்மை உணர்ச்சியுடன் முயன்ருல்!

நாடகத் துறையில் எவ்வித சீர்திருத்தங்கள் ஏற்பட வேண்டும் என்று நாம் அடிக்கடி வற்புருத்தி வருகிருேமோ? அத்தகைய சீர்திருத்தங்களைத் தோழர் சண்முகம் வலியுறுத்துவது நமக்கு மகிழ்வைத் தருவதாக இருக்கிறது.

நாடகக் கலையானது காலத்திற்கேற்றவாறு இருப்பதுடன், சாதாரண மக்களின் வாழ்கையைச் சித்தரிக்கும் வகையில் இருக்க வேண்டும். நாடகங்களும், சினிமாக்களும் புராண மயமாகவே இருந்து வருகின்றன. நல்ல வேலையாக சில ஆண்டுகளாக இந்தப் போக்கு மாறி வருகிறது. நாடகக் கலை அபிவிருத்தியடைய சாமான்ய மக்களின் வாழ்கையை நாடக மூலமாகக் காட்ட வேண்டும்.''

என்று அழகுபடக் கூறியுள்ளார் இயல், இசை, நாடகம் மூன்று துறையிலும் தமிழ் மறுமலர்ச்சி அடைய வேண்டும் என்பதை அவரது அரிய கருத்துக்கள் தெளிவுபட சற்று உறுதியுடன் வெளிப்பட சற்று உறுதியுடன் வெளிப்படுத்து கின்றன. தமிழ்மலர்ச்சி பெறத் தொடங்கிவிட்டது! மலர்ச்சி பெறும் தமிழுக்கு மணம் ஊட்ட வேண்டிய பொறுப்பு தமிழக சிந்தனைச் சிற்பிகளின் நீங்காக் கடமையாகும்!

காந்தி சொல்லை

ஏந்தி நிற்போம்

[ஆஸ்தான கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை]

(1) அடிமைத் தனத்தை விட்டோம் — ஆனால்
அன்பை மறந்து விட்டோம்
மடமைத்தனத்தை வென்றோம் — ஆனால்
மமதை நிறைந்து நின்றோம்
கொடுமை எதிர்த்து வந்தோம் — இன்று
கொள்கை உதிர்த்து நொந்தோம்
உடமை அடையப் பெற்றோம் — ஆனால்
உண்மைப்பிடிகள் அற்றோம்

(2) பதவியை ஏசி வந்தோம் — இன்று
பதவிக்கே ஆசை தந்தோம்
உதவிகள் தேடிச் செய்தோம் — இன்று
உதவியை நாடி வைதோம்
மதவெறி தீமை என்றோம் — நாமும்
மாறிப் பொறமை கொண்டோம்
இதுவும் சுதந்திரமா? — இது
என்ன இதந்தருமோ?

(3) ஒற்றுமை வேண்டும் என்றோம் — இன்று
உறவறத்தூண்டுகின்றோம்
வெற்றுரை விட்டொழித்தோம் — இன்று
வேற்றுமை பட்டிளைத்தோம்
பெற்ற சுதந்திரத்தை — நாம்
பேணி இதம் பெறத்தான்
நற்றவன் காந்தி சொல்லை — எந்த
நாளிலும் ஏந்தி நிற்போம்!

கோவையில் பொதுமக்கள் வரவேற்ற காக்ஷி.



திரு. P. A. ராஜு செட்டியார், R. விஸ்வநாதன், R. கிருஷ்ணன் ஆகியவர்கள்.

திரு. ஆர். விஸ்வநாதன்

அவர்களின் மேல்நாட்டு யாத்திரை

கோவை "ஸ்வர்ண மாளிகை" அதிபர் வைசிய பூஷணம், திரு. பி. எ. ராஜு செட்டியாரின் சகோதரர் குமாரர் திரு. ஆர். விஸ்வநாதன் அவர்கள் மேல் நாடுகளுக்கு சுற்றுப்பிரயாணம் செய்ய, 12-7-49 அன்று கோவையிலிருந்து புறப்பட்டு லண்டன், நார்வே, ஸ்விடன், டென்மார்க், பெல்ஜியம், ஹாலந்து, பிரான்ஸ், இத்தாலி, சுவிஜர்லாந்து முதலிய மேல் நாட்டு நகரங்களுக்கு விஜயம் செய்து ஆங்காங்குள்ள பல முக்கிய தொழில் நுணுக்க ஸ்தாபனங்களையும், கேந்திரமான வியாபார ஸ்தலங்களையும் பார்வையிட்டுவிட்டு 2-10-49 அன்று கோவை திரும்பினர். அவரது மேல் நாட்டு விஜயம் வெற்றிகரமாக முடிந்ததைப் பூராட்டும் வகையில் அன்று கோவை, ராஜா தியேட்டரில் திரு. சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்கள் தலைமையில் தேநீர் விருந்தொன்று "ஸ்வர்ண மாளிகை" குமாஸ்தாக்கள், தொழிலாளர்கள் சார்பில் நடைபெற்றது. அதுசமயம் திரு. விஸ்வநாதன் அவர்களின் மேதையைப் பாராட்டி பலர் சொற்பொழிவாற்றினார்கள். மலர் மாலை சூட்டப்பெற்று மற்றும்பல தேநீர் விருந்துகள் நடைபெற்றன. இவரது பிரயாணத்துடன் ராஜலெக்ஷ்மி மில்ஸ், சென்டிரல் ஸ்டுடியோ ஆகியவைகளின் சொந்தக்காரர்களில் ஒருவரான திரு. கே. கோவிந்தசாமி நாயுடு அவர்களும் கலந்து கொண்டார். இவர்களது மேல்நாட்டு யாத்திரை வெற்றிகரமாக முடிந்தமைக்கு நமது பாராட்டுதல் உரித்தாகுக.

★ விதி!

அறிஞர் அண்ணாத்துரை, M. A.

ஓரிரு நூற்றாண்டுகள் அந்நிய ஏகாதிபத்தியத்திடம், சிக்கி சீர் குலைந்திருந்த தாயகம் விடுதலை பெற்றுவிட்டதை — உலகுக்கு உவகையுடனும் பெருமிதத்துடனும் அறிவித்து விட்ட நாம் அடிமைத் தனம், அடியோடு, பூண்டோடு அழிந்துவிட்டதா? இன்னும் ஏதேனும் நமக்குத் தெரிந்தும், தெரியாமலும் அடிமைத்தனம் நம்மிடம் இருந்துகொண்டு நம்மை ஆட்டிவைக்கிறதா என்று, நம்மை நாமே கேட்டுக்கொண்டாக வேண்டும்—கண்டு பிடித்தாக வேண்டும். காரணம் தெரிந்தாக வேண்டும். நாம் இதைச்செய்யாவிட்டால் நமக்கு முழு வாழ்வும், புது வாழ்வும் கிட்டாது என்பது மட்டுமல்ல, நம்மை நோக்கி நானிலம் நகைக்கும் அதோ பார் விழிகளில்லா குருடன் விலங்கொடித்தேன் என்று வீரம் பேசுகிறான், தன் மீது பூட்டப்பட்டுள்ள வேறு விலங்குகளை உணராமலேயே, என்று கேலி பேசும்.

எனவேதான், நாம் எதெற்கு அடிமைப்பட்டிருந்தோம் — எதையெதை நீக்கி விட்டோம் — மேலும் நீக்கப்படவேண்டிய அடிமைத்தனம் எது என்பது பற்றி, நம்மிலே, நேர்மையில் நாட்டமும், நெஞ்சில் உரமும் கொண்டவர்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டியது மிக மிக முக்கியமான கடமையாகிறது. அடிமைத்தனம் ஒரு கூட்டு சரக்கு, அடிமைத்தனம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்தலும், அடிமைத்தனம் என்பது ஒரு கூட்டுச்சரக்கு என்பது தெரியும்.

கந்தசாமிக்குக் கடும் ஜுரம். ஜுரத்தின் காரணமாகக் கைகால் பிடிப்பு, கண்ணில் பஞ்சடைப்பு, மார்பிலே வலி இவ்வளவும், ஜுரத்தைப் போக்க மருந்திடுகிறார் மருத்துவர், ஜுரம் குறைகிறது—மறைகிறது—முகம் மலருகிறது. ஜுரம் போய்விட்டது வைத்தியரே ஆனால் கைகால் பிடிப்பும், மார்பு வலியும் போகக் காணோம். மேலும் ஏதோ ஓர் வகை புது விதமான அலுப்பும், ஏற்பட்டிருக்கிறது என்று கந்தசாமி கூறுகிறான். ஆமப்பா கந்தசாமி, இப்பொழுது நான் நாலு நாட்கள் கொடுத்த சூரணம் ஜுரத்தைப் போக்க மட்டுந்தான், இனி தரப்போகும் மருந்தினால்தான், கைகால் பிடிப்பும், மார்பு வலியும் அலுப்பும் நீங்கும், இரத்த சுத்தி ஏற்படும். புதிய பலம் உண்டாகும் என்று கூறுகிறார். நல்ல மருத்துவர்

இதைக் கூறுவார். நல்லறிவுள்ள நோயாளி அது போலவே நடப்பார். ஜுரம் என்பது உடலிலே முள் தைத்தது போல, திடீரென உடலுக்குள் புகுந்தது அல்ல, முள்ளை எடுத்து விடுவதுபோல ஜுரநோயை மட்டும் நீக்கிவிட ஜுரம் என்பது கூட்டுச்சரக்கு, அடிமைத்தனமும் அதுபோன்றதே. அந்நிய ஆட்சி கடும் ஜுரம் போன்றது. அது நீங்கி விட்டது இப்போது.

•

விதிக்கு நாம் அடிமைப்பட்டது, அந்நியனுக்கு அடிமைப் பட்டதற்கு பலப்பல நூற்றாண்டுகளுக்கு முன்பே விதி நமது பரம்பரை நோய். பூர்வீகச் சொத்து. ஆஸ்ரமத்திலே பிறந்து, அரண்மனையிலும் குடிசையிலும் சரி சமமாகப் படர்ந்த பழம் பெரும் நோய், ஜொலித்திடும் சாம்ராஜ்யக்களும், மணக்கமழும் கலை நயங்களும், காவியமும், ஓவியமும், வீரமும், செல்வமும் மேலோங்கியிருந்த நாட்களிலேயே இந்த நோய் நம்மை பிடித்துஆட்டிப்படைத்தது. ஆனல் புண்ணின் வாடை வெளியே தெரியாதிருக்கப் பன்னீர்கொண்டு அதனைக்கழுவி புனுகு பூசி, மறைத்திடுதல்போல, நாம் சாம்ராஜ்யச் சிறப்பு, கலையழகு, எனும் பல்வேறு பூச்சுவேலைகளினல் புண்ணின் கெட்ட வாடையைக் குறைத்துப் பார்த்தோம், மறைத்துப்பார்த்தோம், போக்கிட முயற்சிக்கவில்லை.

விதி, கர்மம், வினை, தலையெழுத்து என்று பல்வேறு பெயர்களால் குறிக்கப்படும் இதனை, பழம் வியாதி என்று கூறுவது தவறு; பண்டைய நாட்டிலே, இருந்துவந்த பெரியவர்கள், தவச் சிரேஷ்டர்கள், வேத விற்பன்னர்கள், விதியை நம்பினர்; விதியின் வலிமையையும், அதனை மாற்றிட மானிடனின் சிறுமதி பயன்படாது என்ற உண்மையையும், தத்துவமாகவும், உபமானத்துடனும், கதை வடிவிலும், காவிய உருவிலும் கூறினரே, கசடனே அவர்கள் கூற்று பொய்யா? அந்த நாலில் அவர்கள் கண்ட தத்துவத்தைத் தகர்க்க உன்னல் ஆகுமா? அதனைச் சந்தேகிப்பது தகுமா? அதனை ஒழித்தாக வேண்டும் என்று பேசும் அளவுக்கு உனக்கு துணிவா? என்று கேட்டகத் தோன்றும் பலருக்கு அல்ல, சிலருக்கு. ஆனல் அந்த சிலரும் நேரடியாகக் கேளார் பழங்காலத்திலிருந்து விதி எனும் தத்துவம் இருந்த காரணத்தாலேயே அந்தத் தத்துவம் நீக்கப்பட முடியாதது, கூடாதது என்று யாரும் வாதிடமுடியாது. கனியும் அழுகுவது காண்கிறோம். அந்த அழுகிய பழத்திலே பிறகு புழு நெளியவும் காண்கிறோம். மதுரம் தரும் பழமாயிற்றே, நமது தோட்டத்திலே கிடைத்ததாயிற்றே, இதிலே நெளிவது புழுவாக இருக்க முடியாது; புழு எப்படி இருக்க முடியும், என்று யாராவது வாதாடுவார்களா? பழம் அழுகுவது போல; மலர் கசங்கி மணத்தை இழந்து பிறகு கெட்ட வாடை கொள்வது போல; தழை சருகு ஆவது போல; கட்டிடங்கள் கலைந்து குப்பை மேடு ஆவது போல; பலப்பல தத்துவங்களும், ஏற்பாடுகளும் காலச்சிறையிலே கிடந்து, கிடந்து கெடுவதும், பல கேடுகளை உற்பத்தி செய்வதும், இயற்கையாக ஏற்படும் ஓர் நிகழ்ச்சி. இதனை உணர மறுப்பது உலகை அறியாதார் போக்கு.

விதி, ஒரு நோய்; நெடுநாளாக மனிதசமுதாயத்தில் இருந்துவருவது அதன் பிடியும், வேகமும் குறைக்கப்படுவதற்கு மற்ற நாட்டினர் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் அளவையும், திறத்தையும் விடச் சற்று அதிகமான அளவிலும், திறத்திலும் நாம், விதியெனும் நோயைக்

குறைக்க அல்ல வள்ர்த்திட வேலை செய்து கொண்டிருந்தோம். அதனாலே தான் விதிங்கு அடிமைப் பட்டிருக்கும் நிலை இங்கு மிகமிகக் கவலை தரும் அளவுக்கு இருக்கிறது.

கண்முன் நடைபெறும் பல நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கண்டு பிடிக்கத்தெரியாத பருவம் குழந்தை களுக்கு. ஆனால் காரணம் கண்டு பிடிக்கும் திறமை ஏற்படாவிட் டாலும், சிந்திக்காமலிருப்பதில்லை.

அன்பையும், அன்னத்தையும் ஒன்ருகக் கலந்து, வானத்திலுள்ள நிலவையும், காட்டிக் குழந்தை களுக்குத் தாய் சோறிடும்போது குழந்தையும் நிலவைப் பார்க்கிறது ஏதேதோ எண்ணத்தான் செய் கிறது. மழலை மொழியில் ஏதோதா சொல்கிறது. ஏதேதோ கேள்வி களைக் கேட்கிறது.

யாரம்மா இவ்வளவு அழகான விளக்கை அவ்வளவு உயரத்திலே ஏற்றி வைத்திருக்கிருர்கள். அந்த ஒரு விளக்கைச் சுற்றி, ஏனம்மா அவ்வளவு சிறு, சிறு விளக்குகள் உள்ளன? என்று கேட்கிற ஒரு குழந்தை.

அம்மா எனக்கு அந்தச் சந்திரனைப் பிடித்துத்தா? நான் பந்தாட வேண்டும் என்று கேட்கி றது இன்னெரு குழந்தை. நிலவை யும் பார்த்து விட்டுதன் அன்னையின் திருமுகத்தையும் பார்த்து, இரண் டுக்கும் என்ன வித்தியாசம் என்று யோசிக்கிறது இன்னோர் குழந்தை.

குழந்தை உள்ளத்தில் குமுறி எழும் எண்ணங்கள் வேடிக்கை யானவை ஆனல் ஆராய்ச்சி முடிவு களல்ல; ஆசை அலைகள் அவை. மனித சமுதாயத்தில் குழந்தைப் பருவத்திலேயும் இதே போலத்தான் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும், இயற்கை காட்சிக்கும் எதோ ஒரு வகையான காரணம் தேடி அலைந்து பலப்பல விசித்திரமான காரணங்களை— விளக்கங்களை மனித சமுதாயம் எண்ணிற்று—பேசிற்று—நம்ப லாயிற்று.

மனித சமுதாயத்தில் பாலப் பருவத்தில் கிடைத்த பல உண்மை கள் இன்று உண்மைகள் என்று உலகினரால் ஒப்புக்கொள்ளப் படு வதில்லை. பர்மாவை ஜப்பானியர் பிடித்தபோது அவர்கள் வெளி யிட்ட நோட்டுகள் எப்படி இன்று பர்மாவில் செல்லுபடியாகாதோ அதுபோலச் செல்லுபடியாகாத நோட்டுக்களைச் சேரித்துவைத்து, சிறுபிள்ளைகள் விளையாடினல் கேடு அதிகமில்லை: ஆனல் அந்த நோட்டு கள் செல்லுபடியாக வேண்டும் என்று வாதாடினல் நாட்டுக்கு எவ் வளவு பெரியதொல்லை. அதுபோல மனித சமுதாயத்தின் சிறுபிள்ளைப் பருவ எண்ணங்களை—ஏற்பாடு களை—தத்துவங்களை—விளக்கங் களை இன்னும் நம்பித்தான் தீர வேண்டும், அவைகளுக்குக் கட்டுப் பட்டுத்தான் ஆகவேண்டும் என்று வாதிடுவது எவ்வளவு பெரிய கேடு எண்பதை எண்ணிப் பார்க்கவேண் டும். எதிர்பார்த்ததற்கு நேர்மா ருன நிகழ்சிகளைக் காணும்போது, சாதிக்கமுடியும் என்ற நம்பிக்கை யுடன் துவக்கப்பட்ட காரியம், நல்ல முயற்சிக்குப் பிறகும் முறிகிற போது, போட்ட கணக்குப் பொய் யாகும்போது விதைத்தது முளைக் காதபோது, நண்பர்களிடமிருந்து பகை கிளம்பும்போது ஓவியம் தீட்டு கையில் வண்ணக் கலயம் உடையும் போது, வீணையை மீட்டும்போது நரம்பு அறுந்து, அறுந்த நரம்பு வே கமாகக் கண்ணில் பாயும் போது இதுபோன்ற திகைப்பூட்டும் சம்ப வங்கள்—மனதைக் குழப்பும் நிகழ்ச் சிகள் நேரிடும்போது, மனம் ஓடி

யுமோ என்று மருளும்போது ஏதேனும் ஓர் வகை ஆறுதல் தேவைப்படுகிறது. அப்போது விதி எனும் தத்துவம் வெற்றிச் சிரிப்புடன் மக்கள் உல்லத்திலே குடி புகுந்து கொள்ளுகிறது. குடிபுகுந்த பிறகு விதிதான் எஜமானன், அந்த எண்ணத்துக்கு இடமளித்தவன் அதற்கு அடிமை- அடிமையை ஆட்டிப் படைக்கிறது விதி. பிறகு தெய்வீக முலாம் பூசி விட்டனர் விதியென்ற தத்துவத்திற்கு, ஆகவேதான், அதனை உதறித்தள்ள நெஞ்சு உரம் பலருக்கு வருவதில்லை.

மேலுகத்தில் ஏதோ ஓர் பெரும் ஏடு இருப்பது போலவும், அதிலே பூலோகவாசி ஒவ்வொருவரின் வாழ்கைக் குறிப்பும் முன்கூட்டியே எழுதிவைக்கப்பட்டிருப்பது போலவும், அதன்படித்தான் சகல காரியமும் நடைபெறும் என்றும் கூறப்பட்டது. பலவழிகளில் இந்த நம்பிக்கையைப் பலப்படுத்தினர். எவ்வளவு பெரிய கேடு செய்கிறோம் என்பதை அறிந்தார்களோ, இல்லையோ, மனிதன் மனதை முடமாக்குறோம்; கருத்தைக் குருடாக்குகிறோம், என்று தெரிந்து செய்திருந்தால், அவர்கள் மாபெரும் துரோகிகள்; தெரியாமல் செய்திருந்தால் ஏமாளிகள். கபடராயினும், கசடராயினும் அவர்கள் கட்டி விட்ட கதைகள், இந்நாட்டு மக்களைத் தலைமுறை தலைமுறையாக கெடுத்து விட்டது தன்னம்பிக்கையைத் தகர்த்து எறிந்தது முயற்சிகளை முறியடித்தது முற்போக்கைக் கெடுத்தது.

அதோ ஓர் அழகு மங்கை; வயது பதினெட்டு; ஐயோ என்று அலருகிருள், அவளைத் தொட்டு தாலி கட்டிய கிழவன் இறந்ததால், வாழ்வு கருகிற்றே என்ற வேதனையால்.

விதியடி அம்மா விதி — பலர் கூறுகிருர்கள். எரியுப் கொப்பரையாக உள்ள அவள் மனதிலே எண்ணெய் ஊற்றுகின்ருர்கள், இத்தக் கிழவனுக்கு சாக்காட்டை நோக்கி நடக்கும் வயோதிகனுக்கு என்னைத் தாரமாக்கினீர்களே— தர்மமா, என்று துணிந்து கேட்டு விடுகிறள் ஓர் அறிவழகி.

அது உன் எழுத்தடியம்மா எழுத்து—நீ வந்த வழி—உனக்கு உள்ள விதி உடனே பதில் கிடைத்து விடுகிறது.

எலும்பு முறியப்பாடுபடுகிறேனே, ஏழையாக வதைகிறேனே என்று ஓலமிடுகிருன் பாட்டாளி—நீ கொடுத்து வைத்தது அவ்வளவு தான், உடனே பதில் கிடைத்து விடுகிறது.

கடைவீதிக்குச் செல்கிறோம், கையில் பணத்துடன் கடை வீதி போய் சேருவதற்குள், கடை வீதியிலே உள்ள பண்டங்களே மாறிவிடக்கூடும், விலையும் வித்தியாசமாகி விடக்கூடும், அது மட்டுமல்ல, எடுத்துச்செல்லும் காசும் செம்லுபடியாகாததாகி விடலாம், குறையக்கூடும், மறையக்கூடும், இதிலே எது—எப்போது நேரிடும் என்று தெரிந்துகொள்ள முடியாது, இதில் எதையும் தடுக்கவும் முடியாது என்ருல் கடைவீதி செல்பவனின் கருத்தும், காரியமும் என்ன ஆகும்? இந்நாட்டு மக்களின் பெரும்பான்மையினருக்கு, வாழ்க்கைச் சந்தை இதுபோலவே அமைந்து விடுகிறது.

முயற்சி பலனவிக்காதபோது திட்டம் தகர்ந்து விடும்போது நோக்கம் ஈடேருதபோது, ஏன் முயற்சி பலிக்கவில்லை, திட்டம் ஏன் வெற்றிபெறவில்லை, நமது கணக்கு ஏன் பொய்த்து போயிற்று, காரணம் என்ன என்று கண்டு பிடிக்க ஆராய்ச்சி செய்ய, புதிய

முயற்சி செய்ய, திருத்தம் தர, இந்த விதி எனும் தத்துவம், மனிதனை விடுவதில்லை, எவ்வளவோ பாடுபட்டோம் கடைசியில் பலிக்கவில்லை, நமது விதி அப்படி என்று எண்ணி ஏங்க வைக்கிறது. அவனுடைய திறமையும் தூங்க ஆரம்பிக்கிறது துயரம் எழுகிறது, அப்போது துதிக்கிறான். ஏக்கம் பிறக்கிறது அப்போது புராண இதிகாச ஏடுகளில் இருந்து அவனுக்குக் கதைகள் படித்துக் காட்டப்படுகிறது.

இந்த விதியை வெல்ல, அல்லது முன் கூட்டியே தெரிந்துகொள்ள, மாற்ற, திருத்த, ஏதாவது செய்யலாமா என்ற ஆசை கிளம்பலாயிற்று. அதனைப் பூசாரிகள், சோதிடர்கள் மாந்திரீகர்கள் என்போர் பயன் படுத்திக் கொண்டனர் அவர்கள் வாழ்வு நடாத்த. பிறகு அவர்கள் அந்த வாழ்விலே கிடைக்கும் சுகத்தை இழக்க மனமின்றி விதியை மக்கள் நம்புவதற்காக, மேலும், மேலும் கற்பனைகளைக் கதைகளைக் கட்டி விடலாயினர்—கடவுளின் மீது ஆணையிட்டு எதையும் பேசினர் ஏழை ஏமாளியானான்

விதியை மதியால் வெல்லலாம் என்று வீம்பு பேசும் மனிதர்காள்! நான்முகன் ஒரு சிரம் இழந்தது எதனால்? விதியால். நான்மறை தந்தவராயிற்றே அவரால் முடிந்ததா விதியைத்தடுக்க சிரத்தைக் கொய்த சிவனாராலாவது முடிந்ததா விதியைத்தடுக்க? அவர் பிச்சை எடுத்தார் கையில் சிரத்தை கொண்டு—என்று கதைகள் கட்டினர். வழுக்கு நிலத்தில் தவறிக் கீழே வீழ்ந்து கால் முறிந்தவன், மீண்டும் அந்த வழுக்கு நிலத்திலே நடக்க ஆரம்பித்து மறுபடியும், மறுபடியும் வீழ்வது போலாயினர் பாமர மக்கள்.

ஆனால் உலகிலே, மிகமிகச் சிறு தொகையினர், பேரறிஞர்கள், சீர் திருத்தக் கருத்தினர், உலகை திருத்தும் உத்தமர்கள், சித்தத்தைச் சிறையிட மறுத்தனர், சிந்திக்கத் தொடங்கினர், புத்தம் புதிய உண்மைகளைக் கண்டறிந்து கூறினர். உலகின் உருவம், இயல்பு, எண்ணம், ஏற்பாடு எல்லாம் மாற ஆரம்பித்தன. தட்டை உலகு உருண்டை ஆயிற்று. மேல் ஏழு, கீழ்ஏழு லோகம் என்பது வெறும் கட்டுக் கதை என்பது விளங்களாயிற்று. சூரிய, சந்திர தேவன், வாயு வருணன் அக்கினி என்ற தேவர்களெல்லாம் குடியிருந்து கொண்டு, குதூகலமாக ஆடிப்பாடிக்கொண்டு, ஆரணங்குகளாம் அரம்பை, ஊர்வசி ஆகியோர் புடை சூழ வீற்றிருக்கிறார்கள் என்பதெல்லாம், சுவை மிக்க கற்பனைகள் என்பது தெரியலாயிற்று. கண்ணுக்குத் தெரியாதிருந்த அமெரிக்கா போன்ற நாடுகளைக் கண்டு பிடிக்கவும், கருத்துக்கு எட்டாதிருந்த கருவிகளை அமைக்கவும் முடிந்தது. பஞ்சாங்கத்துக்குப் பக்கத்திலே அட்லாஸ் வந்து சேர்ந்தது, வெற்றிச்சிரிப்புடன்.

உலக அறிஞர்கள் அறிவொளியினால், பழமை மூடு பனி விலக ஆரம்பித்து விட்டது. நாட்டின் நிலையை மாற்றியமைக்கும் மாவீரர்கள், சமுதாயத்தின் நிலையைத் திருத்தும் தீரர்கள், அறிவுப்புரட்சியை நடத்திக் காட்டும் ஆற்றல்மிக்கோர் தோன்றலாயினர். "அன்று எழுதிய எழுத்து" பலப்பல நாடுகளிலே அழித்தெழுதப்பட்டது—அயனார் அல்ல; ஆற்றல்மிக்க வீரர்களால். பிறகு இங்கும், என்று தீருமோ? விதிக்கு அடிமைத்தனம், என்ற விசாரமாவது எப்படித் தோன்றாமலிருக்கலாம்.

விதிக்கு அடிமைப் பட்டிருக்கும் நிலை நிச்சயமாக நாம் எதிர்பார்ப்

பதை விட, விரையில் ஒழியத்தான் போகிறது, அசைவும், ஆட்டமும் கொடுத்து விட்டது.

இப்போது மட்டும், இந்நாட்டு எழுத்தாளரும். பேச்சாளரும் இசைவாணரும், படப்பிடிப்பாளரும்— அறிவுத்துறைக்குத் துரோகம் இழைக்காமல், மீண்டும், மீண்டும் விதிக்கு அடிமையாகும் வேதனைக்கு எரு இடாமல், அதற்கு ஆதாரமாக உள்ள கற்பனைக்கதைகளைக் கருத்துக்களைக் பரப்பாமல் விதி பற்றிய எண்ணத்தை விட வேண்டிய அவசியத்தை விதிக்கு அடிமை படாமல் இருந்தால் எவ்வளவு நலன் நாட்டுக்குக் கிடைக்குமென்பதை, விதியைநம்பி, ஏழை எப்படி ஏமாளியாகிறான் என்பதை எத்தன் எப்படி வஞ்சிக்கிறான் என்பதை, விளக்கத் தமது அறிவையும், திறமையையும், ஒரு பத்து வருஷ காலத்துக்குப் பயன்படுத்த முன் வந்தால் நிச்சயமாக, உறுதியாகக் கூறலாம், விதிக்கு அடிமைத்தனம் ஒழிந்தே தீரும் என்று.

விதி என்று சப்மரைன், டார்ப்பிடோ, விமானம் விஷப்புகை வெடிகுண்டு இவைகளைப் போன்ற படைக்கலங்களைக் கொண்டு இல்லை அப்படிப்பட்ட படைக்கலங்களைக் கொண்ட ஒரு ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபட்ட நமக்கு, இந்த நாளில் சாதாரண ஏடுகள் அதிலும் காலமெனும் செல்லரித்த ஏடுகள் அவைகளிலே காணப்படும் கருத்துக்குக் குழப்பம் தரும் கற்பனைகள், அந்த கற்பனைகளை நம்பிப் பிழைக்கும் கபடர்கள், ஆகிய இவ்வளவு படைக்கருவிகளை மட்டுமே கொண்டுள்ள விதிக்கு அடிமைத்தனம் என்னும் பழமையை முறியடிப்பது முடியாத காரியமல்ல; ஒரு பலமான தாக்குதல்—அறிவுப்பணி புரியும் பலரும் கொண்ட ஒரு கூட்டுப்படையினல் ஒரு அறப்போர்-ஒரு தன்னலமற்ற முயற்சி எடுத்தால் நமது நாட்களிலேயே மக்கள் வாழ்விலே நஞ்சு கலக்கும், இந்த அடிமைத் தளையை வீழ்த்த முடியும்—புது வாழ்வு மலர முடியும் செய்வோமா?

— புது வாழ்வு.

அந்தோ! வைத்திய வள்ளல்
ஈ. வெ. கி. மறைந்தார்.

அவர் மறைந்து விட்டார். அன்புப்பெரியார் குணக்குன்று மறைந்து விட்டார்.

மக்கெளுக்கெல்லாம் மாணிக்கம்போல் விளங்கிய மாபெருந் தலைவர் மறைந்து விட்டார்.

மக்களுக்காக உழைத்த மாண்புமிக்க பெரியார் ஈ. வெ. கி. மறைந்துவிட்டார்.

தன்னலம் கருதா தகைமையாளர் மறைந்துவிட்டார்.

அவரை நினைக்க, நினைக்க அவர் காட்டிய அன்பையும் ஆதரவையும் எண்ணினல் நம் இதயம் துடிக்கிறது. ஆனல் அவர் மறைந்து விட்டார்.

அவரது பிரிவால் வருந்தும் அனைவருக்கும் எமது ஆறுதல் மொழிகள் உரித்தாகுக.

உற்பத்திக்கு ஊக்கம்

(சென்ற இதழ் தொடர்ச்சி) அறிஞர் ஜி. டி. நாயுடு.

இன்று காங்கிரஸ் அரசாங்கத்தையோ, பொது உடமை கட்சியையோ, அல்லது வேறு கட்சியையோ நான் குறை கூற வரவில்லை. எல்லாவற்றிலும் குறை இருப்பது என்பது யாவரும் அறிந்ததே. தொழிலாளர்கள் மன துக்குச் சந்தோஷம் இருக்கட்டும் என்றே, அல்லது இதைக் கேட்போர் காதுக்கு இனிமையோ, மனதுக்குக் குளிர்ச்சியோ, உண்டாக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பேசுவதற்கு இங்கு நான் வரவில்லை. உற்சாகம் அளித்து யாரையும் வசப்படுத்துவதற்காக வேறு ஆதாரங்களையோ, அல்லது கணக்குகளையோ, இங்கு எடுத்துக்காட்ட நான் வரவில்லை. ஆனல் உண்மையைத் தெரிவதற்கு, நடந்தும், நடந்து கொண்டிருப்பதுமான; தொழில் விவரங்களையும் அப்படி நடப்பதில் ஏற்பட்ட புள்ளி விவரங்களையும், அனுகூலம். பிரதிகூலங்களையும், எடுத்துக்காட்ட வேண்டியது அவசியம்தான். அவ்வளவையும் எடுத்துக் காட்டவோ, சொல்லவோ, இந்தக் குறுகிய காலம் இடம் தராது ஆனல் சுறுக்கமாக ஒரு சில நிமிஷங்களில் ஏறக்குறைய 40 வருஷங்களின் அனுபோகத்தில் ஒரு தொழிலாளி ஒரு முதலாளி என்ற இரண்டு நிலைமையிலிருந்து என் அனுபவத்தில் நான், அறிந்தவற்றை மிகச் சுருக்கமாக சொல்லுகிறேன்.

உட்கார்ந்துகொண்டோ, படித்துக்கொண்டு, படுத்துக் கொண்டு அல்லது வெறும் யோசனையில் வந்ததையோ இங்கு சொல்லவரவில்லை. 25 வருஷங்களுக்கு முன் 20 தொழிலாளர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டு இந்த யுத்த இறுதி காலத்தில் 2500க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இருந்தும் ஒரு தொழிலில் ஒரு நாளாவது ஸ்ட்ரைக் என்பதை நான் கண்டது கிடையாது. இங்கு ஒருவர் அங்கு ஒருவர் என்ற வெகு சிலர் தவிர இதற்கு என்ன காரணம் இருக்க வேண்டும். அந்தக்காரணத்தை இன்றுதான் இங்கு ஒளிவு, மறைவு இன்றி சுருக்கமாக ஆனல் வெளிப்படையாகச் சொல்லுகிறேன்.

இங்கு ஒருவர், அங்கு ஒருவர் என்ற வெகு சிலர் தவிர ஒழ்வொரு தொழிலாளியும் மிகச் சந்தோஷத்தோடு கவலை இன்றி தனது காரியங்களை ஒழுங்காக, அன்புடன், பார்த்துக்கொண்டு வருகிறார்கள். ஒருவரும் குடித்து பழக வில்லை, சூதாடுவதில்லை, ஒருவரும் கடன் படவும் இல்லை, தன் தொழிலிலே தான் லக்ஷியமாக கைகொண்டு நடந்து வருகிறார்கள் இதற்கு காரணம் என்ன? அவ்வளவு கணக்கில்லாத சம்பளமோ, கணக்கில்லாத போனசோ, இந்தத்தொழில் ஸ்தாபனம் வாரிக்கொடுக்கவும் இல்லை. ஆனால் தகுந்த ஊதியம் கொடுக்காமலிருப்பதுமில்லை. ஒரு காலத்திலாவது வாயத்திறந்து ஒருவர் கேட்டதும் இல்லை. கேட்டபடி கொடுத்ததும் இல்லை. மற்ற இடங்களில் நடத்துகிறபடி எனக்கு 3 மாத போனசு, 6 மாத போனசு, ஒரு வருஷ போனசு வேண்டும் என்றாவது ஒரு மாதம் லீவு வேண்டும், இரண்டு மாதம் சிக்கு லீவு வேண்டும், என்றாவது கேட்டதும் இல்லை. சொல்லப்புகுந்தால் ஒரு வருஷத்துக்கு 52 ஞாயிற்றுக்கிழமைகள் தவிர்த்து வேறு லீவு எடுத்தவர்களோ ஒரு நாள் ஆப்சன்டானவர்களோ, மாதத்துக்கு 2 அல்லது 3 நாட்களுக்கு மேல் 4, 5 நிமிஷத்துக்கு அதிகமாகத் தாமதித்து வந்தவர்களோ இல்லை. அதற்கு காரணம் என்ன? ஒருவரும் கெட்ட வழக்கங்களில் ஈடுபடவில்லை. லீவு எடுப்பதற்காக அடிக்கடி வியாதி அடையவும் இல்லை ஒற்றுமை என்பதையும் தொழில்தான் தன் லக்ஷியம் என்பதையும் கைவிட்டவர்களும் இல்லை. இதற்கு என்ன காரணம் இருக்கவேண்டும். அந்தக் காரணத்தை இன்றுதான் இங்கு ஒளிவு, மறைவு, இன்றி சுருக்கமாக ஆனால் வெளிப்படையாகச் சொல்லுகிறேன்.

1936ம் வருஷத்தில் இங்கிலாந்தில் மாரிஸ் கம்பெனியில் முதல் முதலில் லாபத்தில் ஒரு பங்கு தொழிலாளிகளுக்கு உண்டு என்று நிர்ணயிக்கப்பட்டது. 1944 ம் வருஷத்தில் அமெரிக்காவில் சில கம்பெனிகளில் இந்தக் கொள்கையை அனுசரிக்கப்பட்டது. ஆனால் அநேக வருஷங்களாக, அநேக கம்பெனிகளில் இவ்வளவு உற்பத்திக்கு இவ்வளவு கூலி என்று நிர்ணயிக்கப்பட்டிருந்தது அந்த நிர்ணயம் இடத்துக்கு இடம், காலத்துக்கு காலம், ஆளுக்கு ஆள், ஆக மாறுபட்டிருந்தது. இன்றும் அரசாங்கத்தில் மந்திரிகளும், மற்ற நிபுணர்களும் கூட தொழில்களில் அரைப்பங்கோ, கால் பங்கோ, அரைக்கால் பங்கோ, வீசம்

பங்கோ, தொழிலாளிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று நிர்ணயித்துக்கொண்டிருக்கிறார்கள். இவற்றிலும் சில குற்றம் குறைகள் இருக்கிறன ஆனால் இவைகள் காலா காலத்தில் குற்றம் குறைகள் நீங்கி காலத்துக்குத் தகுந்தபடி மாற்றிக்கொண்டு வரலாம், இவற்றிற்கு சிறிது மாறுபாடாக நான் மேலே சொன்ன முறைகளின் ஒரு முறையை துவக்கத்திலேயே கையாளப்பட்டது

அதன் பின் 1928-லிருந்து அதுவரையில் அடைந்த அனுபவங்களைக் கொண்டு அந்த முறையிலிருந்து முறைகளை நீக்கி திருத்தி அமைக்கப்பட்டது. திருத்தி அமைக்கப்பட்டபடி ஒரு தொழிலுக்கு ஒருவன் தொழிலை அறிந்து கொள்ளும் வரை ஒரு நிர்ணயிக்கப்பட்ட துகையும், அந்தத் தொழிலுக்கு தகுதி வாய்ந்தபின் ஒரு துகையும். சம்பளமாக நிர்ணயித்து அதன்பின் மூன்று வருஷ சராசரி மொத்த வரும்படியில் கால் பங்கை ஒவ்வொரு தொழிலுக்கும் தக்கபடி பிரித்து வைத்து அதில் ஒவ்வொருவருடைய திறமைக்கும், ஒழுங்குக்கும், இவ்வளவு பாகம் என்று நிர்ணயித்த சம்பளத்தோடு கொடுக்கப்பட்டு வந்தது. இதுவன்றி, அந்த தொழிலில் எந்தப் பிரிவிலும் அந்தந்தத் தொழிலுக்கு தானே தொழிலாளியாகவும், தானே முதலாளியாகவும் இருக்க இடம் கொடுத்து தொழிலை நடத்தப்பட்டு வந்ததுதான், தொழிலாளர் ஸ்ட்ரைக் தகராரோ, முதலாளி லாக்கவுட் தகராரோ அல்லது கவர்மண்டின் படாடோப தகராரோ, ஒன்றும் இல்லாதிருந்ததற்கு காரணம். இந்த முறையை விவசாயத்திலாகட்டும், தொழிலிலாக்காகட்டும், அரசாங்கத்திலாகட்டும், அனுசரிக்கும் பட்சத்தில், இப்போது இருக்கும் ஸ்ட்ரைக், லாக்கவுட், அல்லது அரசாங்க அவசர சட்டங்களோ வேண்டியிருக்காது. இந்த தொழில்களில் லாபத்தை தொழில் பிரிவினைக்குத் தக்கபடியும், அதிலுள்ள தொழிலாளர்களின் திறமைக்குத் தக்கபடி பிரிப்பது ஒவ்வொரு தொழிலிலும் ஒவ்வொரு இடத்திலும் சிறிது மாறுதல்கள் ஏற்படலாம். இந்த மாறுதல்களைச் சரியாக அமைப்பது சிறிது கஷ்டம் தான். ஆனால் இவைகளைச் சரியானபடி செய்யும் பட்சத்தில் இதைப்போல சரியான மருந்து உற்பத்தி பெருக்கத்துக்கோ, பஞ்சத்தைப் போக்குவதற்கோ, நம் நாட்டுக்கு உதவுவதற்கோ, வேறு நாடுகளுக்கு உதவுவதற்கோ, வேறொன்றும் இல்லை என்று சொல்லலாம். இப்போது தொழிலாளர்கள் இந்த ஒரு வழியை பின்பற்றி

அவன்படி நடப்பது என்று தீர்மானிக்குப் பட்சத்தில் உங்களுக்கு பொது உடமையும் வேண்டியதில்லை. காங்கிரஸ் லேபர் என்றுள்ள கட்சியும் வேண்டியதில்லை. நேஷனலிஸம் என்று பொய் குதிரையின் மீது ஏறி போக வேண்டியதும் இல்லை. உங்களுடைய உரிமையை நியாயமாகவும், உருதியாகவும், தவராமலும் அடையலாம். வேறு யாராலும் இதைத் தடுக்கவும் முடியாது. கொள்ளை அடிக்கவும் முடியாது வேறு விதத்தில் தவர்ந்து போகவும் முடியாது. ஆனல் இதில் சோம்பேரிகளுக்கோ, வெறும் வாயாடிகளுக்கோ இடம் இருக்க முடியாது. இந்த வழியின் பலனை அடைய உங்களுக்கு ஒரே வழிதான் உண்டு. அதாவது நீங்கள் செய்யும் வேலையை ஒழுங்காகவும், சுத்தமாகவும், பொய் சரக்குகள் சோம்பல்கள் முதலியவற்றிற்கு இடம் கொடுக்காது. நீங்கள் செய்யும் தொழிலில் உற்பத்தியைப் பெருக்கி காட்டினல் அன்றி இந்த வழியை அடைய முடியாது. உங்களுக்கு எந்த கவர்மெண்டு இருந்தாலும், எந்த தொழில் தலைவர் இருந்தாலும் சரி, எந்த மூலதனக் கொள்கை ஸ்தாபனமுடையவர்களானலும் சரி நீங்கள் அனுவிஷயமாக உங்கள் காலத்தை செலவழிக்காமலும் சக்தியை வீணுக்காமலும், உற்சாகத்தோடு உழைத்து உங்களாலாகும் உற்பத்தியை பெருக்கிகாட்டி அதனல் வரும் ஊதியத்தை பெறுவது என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டு உங்களுடைய நிலைமையை நீங்கள் மேன்பாடடைய செய்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

— வானெலி இசைவு பெற்றது

-: லட்சியம் அகலாது :-

★ இப்பொழுது நீ யுத்தத்திற்குப் போவாய் என்று வைத்துக்கொள்வோம். அங்கு நீ எப்பொழுதும் சண்டை செய்யமுடியாது, போரில் இருதரப்பிலும் அதிக நஷ்டம் விளைந்தபோது நீ யுத்தத்தை நிறுத்த வேண்டியவனுவாய், அப்பொழுது உனது பழைய லச்சியக் கேள்விகள் உன்னை விட்டு அகல வழியில்லை.

— அப்பிரகாம் லிங்கன்.

S. BEEMIAH CHETTY

"WHITE SHOP"

BIG BAZAAR, ★ COIMBATORE.

இதனுல் பொது ஜனங்களுக்கு தெரிவித்துக்கொள்வது யாதெனில்:- எங்களிடம் கல்யாண காலங்களுக்கு தேவையான பெங்களுர், காஞ்சீவரம், கொரநாடு சீலைகளும், பாவாடை, ரவிக்கை தினுசுகளும், சேலம் வெண்பட்டு துப்பட்டாக்கள், பட்டுக்கரை வேஷ்டிகளும், மான்செஸ்டர் வாயில்ஸ், சீட்டி தினுசுகளும், ஆமதாபாத் 7, 8 கெஜம் வேஷ்டிகள், பாப்ளின் ஷர்ட்டிங், கோட்டிங் வகையருக்களும், பாம்பே மில் வேஷ்டி தினுசுகளும், பக்கிங்காம் கர்னுடிக் மில் எல்லாவிதமான புதிய சரக்குகள் கண்ட்ரோல் விலையில் எங்களிடம் கிடைக்கும்.

விசேஷ காலங்களுக்கு ஒஸ்தி இலவம் பஞ்சினுல் தயார் செய்த மெத்தை, தலையணை, குஷன் வகையருக்களும் எங்களிடம் விலை சரசமாய் கிடைக்கும். ஸ்பெஷல் ஆர்டர்களுக்கும் குறித்த காலத்தில் செய்து தரப்படும்.

உங்களுக்கு தேவையானவைகளை எப்பொழுதும்போல் எங்களிடமே பெற்றுக்கொள்ளவும்.

S. பீமையா செட்டி,

"ஒயிட் ஷாப்"

பெரிய கடை வீதி, — கோயமுத்தூர்.



பாச வலை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

3. சுதனான் சொல்கிறான்.

ஆசிரியை S.P. மீனாட்சி அம்மாள்

என்னுடையவராயினும் என்ன? மின்னிடையாளை மேவி யிருக்காத வாழ்வென்ன வாழ்வோ? காணாவின் முகம் பார்த்து மதுரமொழி கேட்டு விழி வீச் சேற்று வாரமிரண்டோடியதே! காணா என் நெஞ்சேறி நிலைத்த உயிர். நெஞ்சில் ரத்தமுள்ளளவும் நினைவிற் தோன்றித் தோன்றி தொல்லை தருவாள்! கண்ணயர்ந்தால் கனவிலே வந்து கொஞ்சு மொழி பேசி கோவை அதரம் துடிக்கத் துயருறுவாள்! இது புதிய வாழ்க்கை காணாவின் நினைவிலே நாளைக்கழித்த வேளையில் தந்தை தாயாரின் குடும்பத் தலைமைச் செல்வாக்கு என்னை வேற்றுமைப் பாதையில் திருப்ப எத்தனிக்கிறது. தந்தையார் தனவந்தர், தயாளகுணம் படைத்தவர். தாயார் தன்பிறந்த வீட்டுமீது மிகப்பற்றுள்ளம் படைத்தவர். தந்தைக்குத் தாயடங்கி நடக்கும் பண்புடையவர்தான். என் தாய் எவ்விதமோ கவர்ச்சி செய்து தந்தையைத் தன்வழி திருப்பும் சாதுர்யம் பெற்றவர். கல்லூரிப் படிப்பிற்கு வந்தநாள் வரை காலம் சென்ற என் தாய்மாமனின் மகளை நான் கண்டதில்லை அவளைப்பற்றி கேட்டதுண்டு.

இந்த விடுமுறையில் அவளையும் அவள் தாயையும் கண்டேன். என் தாய்மாமனின் மகள் ரஞ்சினி கட்டழகிதான். மறுக்க மாட்டேன். என் தாய் ரஞ்சினிமேல் ஆகாத அன்பு கொண்டவள். ரஞ்சினி வந்தவுடன் அவளைக் கட்டித் தழுவித் தன் அண்ணனை நினைத் தழுதாள். இச்சமயத்தில் எனக்கும் ரஞ்சினிக்கும் திருமணம் செய்யவேண்டுமென்ற பேச்சு தலைவர் தந்தையிடத்தும், தலைவி தாயிடத்தும் மாமனின் மனைவி கோமளத்திடத்தும் நடமாட்டம் செய்தன. தந்தை சந்துரு தாய் தனம் இருவரும் ரஞ்சினிக்குப் புத்தாடை, புது மெருகிட்ட நல்லாபரணங்கள் தந்தளித்தார்கள், ரஞ்சினியின் குறுகுறுப் பார்வையும், வெட்டெனப் பேசும் மதுரமொழிகளும் என்னைக் கண்டவுடன் அடங்கிவிடும். ரஞ்சினி ஒருவருமில்லாதபோது அவளறையில் இடுகண் வழிபார்ப்பதை ஊஞ்சலில் பத்திரிகைப் படித்துக்கொண்டிருக்கும்போது கடைக்கண்ணால் பல தடவைகள் பார்த்திருக்கிறேன். அச்சடித்த பதுமைபோல் அவள் என்னைக் கண்டவுடன் ஆவதின் அர்த்தத்தை அறிந்தேன். கண்மட்டும் ரஞ்சினியைக் கண்டதே தவிர என்நெஞ்சு கானமுகியிடம் கலந்து விட்டது.

கல்யாணம் புரிந்து கொள்ள முடியாத புதிர். காதலோ சுவைத்தனுபவித்த மாறுத இன்பம். கல்யாணத்தை வெறுப்பதா? காதலைத் துறப்பதா? இவ்விரு கேள்விகள் என் நெஞ்சைத் தாக்கின. தாய்தந்தையெனும் பாசவலை என்னைப் பின்னியது. காதல்தந்த கானமுகியின் உயிரின் பாசவலை என்னை மறக்கச் செய்து அவள்பக்கம் நின்றது. அய்யோ! பாசவலையே! என்னை மிருகமாக்கவே வரும். ஐப்பசி மாத கடைசியில் எனக்குக் கல்யாணமென தீர்மானமாயிற்று என்னைக் கேட்காமலே பாவமே அறியாத ரஞ்சினிக்கிறங்குவேனே? வீட்டார் தொல்லைகளையெல்லாம் எனக்காக இன்பமாக பொறுத்து வளரும் அன்புப் பூங்கொடி கானமுகிக்கிரங்குவேனு? எதற்கிரங்குவேன்! ஏதுமறியேன்!!

பாசவலை விரிந்தது.

பாசவலை விரிந்தது. அது என் காலைக்கட்ட ஆரம்பித்துள்ளது. அதனின்றும் விடுபட எத்தனித்தேன் முடியவில்லை. கல்யாணத்திற்கு இன்னும் எட்டே நாள்தான் உள்ளது. நேற்று வந்த கானமுகியின் கடிதம் கண்டேன் அந்த கடிதத்தில்:

சுகுணரே! தாங்கள் எனக்கனுப்பிய சாவோலை கண்டேன். சாவளித்திருந்தாலும் வரவேற்றிருப்பேன், சித்திரவதை செய்வதை என்னால் தாங்க இயலாது. தாங்கள் இவ்விதம் செய்வீர்களென எதிர்பார்க்கவில்லை. காலஏரியில் என்கதி கருகி சாம்பலாயிற்றே என வருந்துவதைத் தவிர வேறெதுவும் சொல்ல விளங்கவில்லை. நிலை கெட்டுப்போயிருக்கும் சூழ்நிலையில் தங்கள் நினைவு இவ்வாறுருகுமென கனவிலும் கருதவில்லை, தாங்கள் பிரியும்போது நான் வடித்த கண்ணீர் உங்கள் நெஞ்சில் வடுக்களாக விளங்குவதைப் பார்க்கவில்லையா? வருஷமெத்தனை ஓடினும் அவ்வடுக்கள் அழியாதென்பதை அறியமாட்டீர்களா? இனி எங்குபோய் எவ்விதம் நான் வாழ்வது. பாசவலை— பெற்றோர்களின் மீதுள்ள பாசவலை தங்களை என்னை மறக்கடித்ததால் தங்கள்மீது நான் விரித்தபாசவலை என் உயிரை என்னுடல் மறக்கடித்து விடுமென்பதைத் தெரிந்திருந்தால் தாங்கள் தவறுன வழிக்கு மெருகு பூசி என்னிடம் தங்கள் மதிப்பை விற்றிருக்கமாட்டீர்கள். நம்பிய பெண்ணை நட்டாற்றில்விட்

டதைப்போல புதிதாக தங்கள் வாழ்க்கைத் தீபத்தை ஏற்றவரும் அந்தப் பொற்கோதையை காலம் பார்த்து குரல் வளையைத் திருகி விடாதீர்கள். எதிர்காலத்தில் நீங்கள் நடந்துகொள்ளும் முறையையும் என் வருங்கால வாழ்க்கை எப்படியிருக்க வேண்டுமென்பதையும் நேரிலோ, முடியாவிடில் கடிதத்திலாவது உடனே விளக்கம் வேண்டும். பதில் நோக்கும்.

கைவிடப்பட்ட கானமுகி.

§ § § § §

கடிதங் கண்டதிலிருந்து உலகம் சுற்றுவது போல் எனக்குத் தென்பட்டது. என்னென்னமோ எண்ணினேன். ஏதேதோ.........! முடிவில் ஓர் தீர்மானத்திற்கு வந்து கடிதம் எழுதினேன் அதில்;

» « » » »

கானமுகி!

கடிதம் கிடைத்தது, கடிதம் கண்டு கலங்கினேன் கடிதத்தை விரித்தெழுதி உன்னைத் தொல்லைக்கிருப்பிடமாக்க விரும்பவில்லை. நேரில் பார்த்துப் பேசிப் பிரிந்தால் நேராதது நேர்ந்துவிடலாம் அதற்கஞ்சி துலேவிலிருந்து இந்தக்கடிதத்தை உனக்கு தூதனுப்பியுள்ளேன்.

அன்பே! நீயோ தாசிகுலத்தில் தழைத்தவள். உன்னை மாதவியாக ஏற்றுக்கொள்கிறேன். ரஞ்சினியை கண்ணகியாக்கி விட்டார்கள். அந்த முறையை நீ கையாண்டால் நமது தொடர்பு நிலைத்திருக்கும். பாச வலையில் பின்னப்பட்ட காரணத்தால் படுதொல்லைக்களான பாதகன் உன்பதிலைப் பார்க்கும்.

அன்பன்,

சுகுணன்.

« » « «

போட்ட கடிதத்திற்கு பதில் கிடைத்தது. இன்னும் 4-நாட்களே என் திருமணத்திற்கு. கடிதத்தில் ரத்தங்கக்கும் வார்த்தைகளை கண்டு கலங்கினேன். கடிதத்தின் அடக்கம் வருமாறு.

கோவலரே! மாதவிக்குவரைந்த கடிதம் கிடைத்தது. உம்மை சுகுணரென்று மதித்திருந்தேன். நீரதை மறுத்து கோவலனுனீர். மற்றொருத்திக்குப் பாதியாகவும் எனக்குப் பாதியாகவும் தங்கள் தேகத்தைப் பிட்டுத்தின்னும் பேயல்ல நான். எந்தவித இன்னல் ஏற்றபோதிலும் என் கற்பை விலையிடுமாறுபோதிக்கத் தாங்கள் யார்? தாசிகுலத்தில் தோன்றினல் அவளுக்குத் தன்மையில்லையா? தங்கள் கடிதம் என்னிடம் எதுவும் பேசவில்லை அதற்கு மாருக பிதற்றியிருக்கிறது. பேதமையுடையவள் பெண் என்பதால் பிதற்குலே வாழ்வின் ஆக்கமென மாதவியாக சிறிதுவயதில் பள்ளி நாடகத்தில் நடிக்க மறுத்த கானமுகி ஏற்கமாட்டாளென புதுயுகக் கோவலர் ஏற்கமாட்டார். புதிய இளங்கோ உண்டாகி புதியதோர் சிலப்பதிகாரம் தோன்றவேண்டுமென் விழையும் கானமுகி பழமையின் பாழான கொள்கைக்குச் சாவுமணி அடிப்பவளென்பதை நன்கறிந்தும் முறயற்ற வழியில் கடிதம் தீட்டியதைக்குறித்து நான் தங்களைச் சந்தேகிக்கிறேன்.

நலன் குறித்து கடித மெழுதின் ஏற்க சித்தம் இல்லையெனில் ஏதும்

ஏற்பதற்கு தயாராயில்லை.

வாழ்வினும் மானமே மேலென எண்ணும்

மாதவி வழியினள்.

கடிதத்தில் என் பேதைமைக்கு கொடுத்த சவுக்கடியைக் கண்டு அஞ்சினேன். இரவு வந்தது படுக்கையிற் சாய்ந்தேன். தூக்க தேவி கண்படுக்கையில் பொருந்தவில்லை அமைதி அன்னை என் நெஞ்சை மறந்தாள். சிந்தனைத்தாய் என்னை படாதபாடு படுத்தினுள். ஒரே புயல் என் நெஞ்சில்; கருத்தில் கலந்தது. காலைக் கதிரொளி பரந்தது. கேட்டது நெஞ்சு கேள்வியை பாசவலை பெரிதோ மோசக் கொலை சிறிதோ என்று இக் கேள்வியைக் கேட்ட சிவந்த சூரியனின் முகமும் மெல்ல மெல்ல வெண்மையாக மாறிற்று வெட்கத்தால்.

[தொடரும்]

கலியாணம் மற்ற விசேஷங்களுக்கு
நூல் ஜவுளிகளுக்கு
சிறந்த இடம்

★

கிருஷ்ணு கிளாத் ஷாப்
பெரியகடை வீதி,
கோயமுத்தூர்.

★

உரிமையாளர்கள்:—
K. கிருஷ்ணசாமி,
V. M. கிருஷ்ணசாமி

காலஞ்சென்ற திருமதி

கிருஷ்ணவேணி அம்மாள்

ஆதிதிராவிட இலவச விடுதி,

கருங்கல்பாளையம் (ஈரோடு)

அண்ணல் காந்தியடிகளின் அரும் பெரும் திட்டங்களில் அதிமுக்கியத் தொண்டான ஹரிஜன முன்னேற்றங் கருதி, அவர்களின் நலனுக்காக இலவச சாப்பாடு, படுக்கை, மற்றும் எல்லா வசதிகளும் அளித்து, சுமார் 25 மாணவ மாணவிகளை வைத்துப் போஷித்து வரும் உன்னத வாசக நிலையம்.

இந்த நிலையம் திரு. எம். ஏ. வெங்கட்டரமணசாமி நாயுடு அவர்களின் சொந்த முயற்சியால் போஷிக்கப்பட்டு உயரிய முறையில் கடந்த மூன்றுவருட காலமாக நடத்தப்பட்டு வருகிறது. இவர் கடந்த பதினைந்தாண்டுகளாக காந்தியடிகளின் நிர்மாணத் திட்டங்களிலும், ஹரிஜனத் தொண்டிலும் ஈடுபட்டு குறிப்பாக ஆதித்திராவிட மக்களின் முன்னேற்றத்திற்காக அரும் பெரும் தியாகங்கள் செய்துள்ளார். அவரது சேவையின் சின்னமாக விளங்கி வரும் இந் நிலையம் இன்னும் நல்ல முறையில் வளர்ந்தோங்கி வளம்பெறுமென நம்புகிறோம்.

ஓட்டுரிமைக்காகப் போராடிய பெண்கள்

பெண்கள் பகுதி.

திருமதி S. R. காந்தி, B. A., (Hons.)

உரிமையின் அடிப்படையில் அமைந்த உறவுதான் நெடுங்காலம் நீடிக்கும். உரிமை மற்றவரால் வழங்கப்படுவதல்ல, ஆனால் அது ஒவ்வொருவருக்கும் இயற்கையாக அமைவதாகும். உரிமை வழங்கப்பட்டால் அமைதி நிலவும், அமைதி நிலேத்தால் அறிவு விரியும், இன்பம் நிலவும், இவ்வுண்மைகளை அறிந்திருந்தும் வலிய ஆண்கள் மெலிய பெண்களின் உரிமையைப்பறித்தனர். அதனுல் போராட்டம். ஆனுல் அன்று பழந்தமிழ் காலத்தில் பெண்கள் ஓட்டுரிமைக்காகப் போராடவில்லே, காரணம் சம உரிமை பெற்றிருந்தனர். அதற்குச் சரித்திர சான்றுகள் பல உள: அந்நாளில் அரசியல் பிரச்சனைகள் பற்றி கட்டுப்பாடு என்பது சிறிதுமில்லாது பெண்கள் சொற்பொழிவு ஆற்றியதாக சீனப் பேரறிஞர் ஹுயான் சியாங் குறிப்பிட்டுள்ளார். அரசிகளும், வீரத்தாய்களும், புலமை மிக்க பெண்டிரும் அரசியலில் பங்கு கொண்டு நாட்டின் மேன்மைக்கு உழைத்தாக, இந்தியா, எகிப்து நாடுகளின் சரித்திரங்கள் வாயிலாக அறிகிரேம்.

பிற்காலத்தில் உரிமை மறுக்கப்படுவதற்கு முடி மன்னர்களின் முரணன் போக்கு தலேயாய காரணமெனலாம். கால வேகத்தில் முடியாட்சிகள் முறியடிக்கப்பட்டு, குடியரசு நிலே பெற ஆரம்பித்தன. பத்தொன்பதாம் நூற்றுண்டில் உரிமைக்கிளர்ச்சி வலுவடைந்தது. இந்தக் கிளர்ச்சி பெண்டிரையும் ஈர்த்தது.

இனி பல்வேறு நாடுகளில் பெண்கள் ஓட்டுரிமைக்காகப் போராடியது பற்றி ஆராய்வோம். உலக முதல் மகாயுத்தம் ஆரம்பமாகுமுன்னரே இங்கிலாந்து தேசத்தில் பெண்களுக்கு ஓட்டுரிமை வேண்டுமென்ற இயக்கம் தோன்றிவிட்டது. அது சிறிது சிறிதாக வளர்ந்து வந்தது. யுத்த சமயத்தில் இந்த இயக்கத்திற்கு மதிப்பும் பலமும் ஏற்பட்டன. இதற்குக் காரணம் பெண்கள் யுத்த காலத்தில் செய்த அரும்பெரும் சேவையேயாகும். ஆண்கள் போர்முனைக்குச் சென்ற பொழுது நாட்டின் ஆக்க வேலேகளில் பெண்கள் ஈடுபட்டனர். பொது மக்களின் ஆதரவும் கிடைத்தது அரசாங்க அலுவல்ககளிலும் பெண்களுக்குப் பங்கு இருக்க வேண்டும் என்ற நாட்டம் ஏற்படலாயிற்று. ஆனுல் அன்று யுத்தம் நடந்து கொண்டிருந்ததால் இது சம்பந்தமாக ஒரு சரியான முடிவு ஏற்பட முடியவில்லே. பார்லிமெண்டில் விவாதித்து அதன் பிறகு சட்டம் செய்வதனுல் கருத்து வேற்றுமை பெருகி எதிர்ப்பு மிகுதியாகலாம் என்று அஞ்சி பெண்களுக்கு சம ஓட்டுரிமை அளிக்கும் விஷயத்தை முடிவு செய்ய சகல

அரசியல் கட்சிகளையும் கொண்ட ஒரு மகாநாடு 1918-ல் கூட்டப்பட்டது. இந்த மகாநாட்டில் புதியதொரு திட்டம் தயாராயிற்று. இதுவே மக்களின் பிரதிநிதித்வ சட்டமாக பார்லிமெண்டில் நிறைவேற்றப்பட்டது அதன் படி 21 வயதுக்கு மேற்பட்ட எல்லா பிரிட்டிஷ் ஆண்குடிமக்களுக்கும் சர்வகலாசாலைபட்டதாரிகளுக்கும் ஓட்டுரிமை அளிக்கப்பட்டது.

பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கும் பிரச்னை எழுந்தபோது, பலவித மான அபிப்பிராயங்கள் எழுந்தன. ஒரு சாரார் ஏற்கனவே யுத்தத்தின் காரணமாக ஆண்கள் ஜனத்தொகை குறைந்திருக்கும், இந்த சமயத்தில் பெண்களுக்கு சம உரிமை வழங்கினல் பெண் வாக்காளர் தொகை அதிகரித்து விடும் என்று கருதினர். மற்றொரு சாரார் யுத்த பீதியிலிருந்து நாடு விடுதலை பெருத இந்த சமயத்தில் பெண்களுக்குத் தேர்தல்களில் ஸ்தானங்கள் கொடுப்பதும், சம ஓட்டுரிமை வழங்குவதும் நாட்டின் நலனுக்கு குந்தகத்தை விளைவிக்கும் என்று கருதினர். எனவே யுத்த காலத்தில் பெண்களின் கோரிக்கைகளுக்கு சாதகமாயிருந்தவர்களும் பாதகமாக மாறிவிடும் நிலை எற்பட்டது. இது பற்றிப் பல நாட்கள் விவாதம் நடந்ததின் பயனுக சில கட்டுப்பாடுகளுடன் பெண்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டது. அதன்படி 30 வயதுக்கு மேற்பட்ட பெண் களும், சொத்துடையவர்களும், பட்டதாரிகளும் ஓட்டுரிமை பெற்றுர்கள். இதனல் பூர்ண திருப்தி ஏற்படவில்லை. வன்மையான கண்டனம் கிளம்பியது. கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தனர் பெண்கள். பிற்போக்கு வாதிகளின் கேலிக்கு இவர்கள் ஆளானுர்கள். ஆயினும் இவர்களது விடா முயற்சி வெற்றியைத்தந்தது.

1928-ம் ஆண்டில் பிரிட்டிஷ் மந்திரி சபையார் பெண்களுக்கு சம ஓட்டுரிமை அளிப்பது என்ற சட்டம் செய்தனர். அதன்படி 21 வயதுக்கு மேற்பட்ட எல்லா பிரிட்டிஷ் குடிமக்களும் ஆண் பெண் அடங்கலாக வாக்குரிமை பெற்றனர். மொத்தம் 270 லக்ஷம் வாக்காளர்களில் பாதிக்கு மேல் பெண்களாயினர்.

மக்கள் எல்லோருக்கும் ஏககாலத்தில் ஓட்டுரிமை வழங்கப்படவில்லை இங்கிலாந்து தேசத்தில் மட்டுமல்ல, எல்லா தேசங்களிலுமே அப்படித்தான் உலக மகாயுத்தத்திற்கு பின்னர் ஐரோப்பிய நாடுகளிலும், ரஷ்யாவிலும், பெண்கள் அனைவரும் ஓட்டுரிமை பூரணமாகப் பெற்றுள்ள நாடு ரஷ்யா ஒன்றுதான்.

அமெரிக்கா தேசத்தில் 9 'ஸ்டேட்'களில் மாத்திரம் சில பெண்களுக்கு ஓட்டுரிமை இருந்தது. 1917-ம் ஆண்டில் பிரிஸ்டோ மாண்டல் என்பவர் பெண்களின் சம ஓட்டுரிமை பிரச்னையை கிளப்பினுர். அதன் பிறகு அமெரிக்கா அரசியல் அமைப்பிலே பல திருத்தங்கள் ஏற்பட்டன 19-வது திருத்தத்தின்படி 1920-ம் ஆண்டு ஆகஸ்டு 26-ந் தேதி முதல் அமெரிக்கா நாட்டுப்பெண்கள் எல்லோரும் ஓட்டுரிமை பெற்றனர். இன்றைய தினம் 4 கோடி, 81 லக்ஷத்து ஐம்பதாயிரம் பெண் ஓட்டர்கள் இருக்கின்றனர். அதாவது ஆண் ஓட்டர்களை விட பெண் ஓட்டர்கள் 26 லக்ஷத்து, அறுபத்தி ஒன்பதாயிரம் அதிகமாக இருக்கின்றனர். அதனல் அடுத்த நவம்பர் மாதத்தில் நடக்கவிருக்கும் அமெரிக்கா ஜனதிபதி தேர்தலில் பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை முக்கிய ஸ்தானம் வகிக்கப்போகிறது.

இந்த உரிமை போராட்டம் இத்தியாவில் எப்படித் தோன்றி வெற்றி பெற்றது என்று கவனிப்போம் 1919-ம் ஆண்டுவரை பெண்களுக்கு வோட்டுரிமை வழங்கப்படவில்லை. 1917-ம் ஆண்டில் இந்தியா மந்திரி மாண்டேகு சென்னைக்கு வந்திருந்தபொழுது அகில இந்திய மாதர் சங்கத்தின் சார்பாக பெண்கள் ஓட்டுரிமை பற்றி டாக்டர் அன்னி பெஸன்ட் அம்மையார், சரோஜினி நாயுடு, ராணி லக்ஷ்மிபாய் ராஜ்வாடே ஆகியவர்கள் வற்புறுத்தினார்கள். அதே ஆண்டில் கல்கத்தாவில் டாக்டர் அன்னி பெஸன்ட் அம்மையார் அவர்கள் தலைமையில் கூடிய தேசீய காங்கிரஸ் மகாசபை முதல் முறையாக பெண்கள் ஓட்டுரிமையை ஆதரித்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. மேலும் இந்தியாவில் வாக்குரிமைப் பிரச்னையைப் பரிசீலனை செய்வதற்காக சவுத்பரோ கமிட்டி அமைக்கப் பட்டபோதும் பெண்களின் வாக்குரிமைக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டது பார்லிமெண்ட் கூட்டுக்கமிட்டி முன் டாக்டர் அன்னிபெஸண்ட் அம்மை யார், சரோஜினி நாயுடு, ஹீராபென் டாடா, ஆகியோர் சாட்சியம் கொடுத்தார்கள். ஆனால் பெண்களின் வாக்குரிமை உள்நாட்டு விவகார மெனவும், இந்தியத் தலைவர்களே இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென வும், பிரிட்டிஷ் பார்லிமென்ட் முடிவு செய்தது. அது இந்தியப் பெண் களுக்கு பெரும் ஏமாற்றத்தைத் தந்தது. சட்ட மூலமாக நேரடியாக பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படவில்லையேயாயினும், மாகாண சர்க்காருக்.து வாக்குரிமை வளங்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. சென்னையும், பம்பாயும் 1921-லும், ஐக்கிய மாகாணம் 1923லும் மத்ய மாகாணமும், பஞ்சாப்பும், வங்காளமும், 1926-லும் பெண்களுக்கு குறைந்த அளவில் வாக்குரிமை அளித்தன.

பெண்கள் உரிமைகளைத் தடையின்றி வழங்க வந்த முதல் மாகாணம் வழக்கம்போல் நமது மாகாணமே 1927 ல் முத்துலக்ஷ்மி ரெட்டி அம்மை யார் அவர்கள் இந்தியாவிலேயே முதன் முதலாக சென்னை மாகாண சட்டசபை அங்கத்தினராக நியமனம் பெற்றார்.

இந்தியப் பெண்களின் வாக்குரிமைப் போராட்டத்தின் அடுத்த கட்டத்தில் பேகம்ஷா நவாஸ், ராதாபாய் சுப்பராயன், ராஜகுமாரி அமிர்த கௌரி, பேகம் ஹமீத் அலி, முத்துலக்ஷிமி ரெட்டி ஆகியோர் தீவிர பங்கு எடுத்துக்கொண்டு உழைத்தார்கள். அதன் பயனாக 1935 ம் வருடம் சட்டபடி பெண் வாக்காளரின் எண்ணிக்கை அறுபது லட்சமாக உயர்ந் தது. வரி செலுத்துவோரின் மனைவிகள், குறிப்பிட்ட சொத்துள்ளவர்களின் மனைவிகள் ஓரளவில் குறைந்தபட்ச கல்வி பயின்ற பெண்கள் ஆகியோர் தாம் வாக்காளர்களாக முடிந்தது. 1937 ல் நடைபெற்ற தேர்தலுக்குப் பின் மாகாண மந்திரி சபைகள் அமைக்கப்பட்ட பொழுது, திருமதி விஜயலட்சுமி பண்டிட் அவர்கள் மந்திரியாகவும் ருக்குமணி லட்சுமிபதி உதவி சட்ட சபைத்தலைவராகவும் மற்றும் நால்வர் பார்லிமெண்டரி காரியதரிசிகளாகவும் நியமனம் பெற்றனர்.

இப்பொழுது சுதந்திர இந்தியாவின் புதிய அரசியல் திட்டத்தில் வயது வந்த எல்லா ஆண்களும், பெண்களும் எவ்வித பேதமுமின்றி ஓட்டுரிமை வழங்கப்பெற்றுள்ளனர், ஓட்டுரிமைப் போராட்டத்தில் நமது பெண்கள் மின்னல் வேகத்தில் முன்னேறியிருப்பினும், மற்றைய சமூகத் துறைகளில் முன்னேற வேண்டியது பெரும் பணியாக இருக்கிறது.

ஓட்டுரிமைக்காகப் போராடிய பெண்கள் மேரி உல்ஸ்டன் கிரேப்ட் Mary Woolshtone graft லிடியா பெக்கர் Lydia Becker கேரட் ஆஸ்டாசன் Garrat Andesson எமிலின் பாங்கர்ஸ்ட் Emmeline Pankaraust பாசட் Faucet முதலானவர்களுக்கு நமது நாட்டில் டாக்டர் அன்னி பெஸண்ட் அம்மையார், கவியரசியும், ஐக்கிய மாகாண கவர்னருமான சரோஜினி தேவியார், இந்திய சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்த கௌரி, டாக்டர் முத்துலக்ஷ்மி ரெட்டி, மாஸ்கோவில் இந்திய ஸ்தனிகராக இருக்கும் விஜயலட்சுமி பண்டிட், அநுசூயாபாய்காளே, முதலானவர்களுக்கும் பெண் உலகம் நன்றி செலுத்தக்கடமைப்பட்டிருக்கிறது.

(வானொலி இசைவுடன்)

குறைந்த விலை! நிறைந்த ரகங்கள்!!

பண்டிகையை முன்னிட்டு ஏராளமான
புதுரக ஜவுளி தினுசுகள் வந்திருக்கின்றன
எங்கே?

பாம்பே வேர் ஹவுஸ்.

கோவை.

Shops & Shops Every Where
But Shoping at
BOMBAY WARE HOUSE.
is a Pleasure & Profit

★ தேவைக்கு விஜயம் செய்யுங்கள். ★

BOMBAY WARE HOUSE,

BIG BAZAAR STREET, COIMBATORE.

சூலூரில் கால்நடை கண்காட்சி



திரு. A. G. தாமோதரசாமி நாயுடு.

சூலூர் சந்தைப்பேட்டையில் இவ்வாண்டில் நடந்த மாட்டுத் தாவணி மிக சிறப்பான முறையிலும் இதற்கு முன்னர் நடந்ததை விட உயர்ந்த வகையிலுமிருந்தது

இதை முன்னின்று நடத்தியவர் அப்பநாயக்கன் பட்டி. A. G. தாமோதரசாமி நாயுடு அவர்களாவார். சென்ற நான்கு வருஷமாக உழவர்கள் சௌகரியத்தை முன்னிட்டுத் தன் சொந்தச் செலவில் (சிறிது சர்க்கார் சகாயம் உண்டு) ஒவ்வொரு ஆண்டும் இக்கால் நடைக் காட்சியை நடத்தி வருகிறார். விவசாயத் துறையிலும், கால் நடையைப் பேணுமுறையிலும், மிக்க தேர்ச்சி பெற்றவர் நமது நாயுடு அவர்களாவார்.

மாஜி வைசிராய் லார்டு லின்லித்கோ கால் நடைக் கண்காணிப்பு மிக அவசியமென்று அறிக்கை விட்டபோது நமது நாயுடு அவர்களை கால் நடை பேணுமுறையில் கவனத்தைத் திருப்பியது. திருப்பூரில் நடந்த கால் நடைக்கண்காட்சியை விட இந்தக் கண் காட்சி உண்மையிலேயே ஒப்புநோக்கின் உயர்வுடையதாகும்.

விவசாயத்தின் முன்னேற்றம் கால்நடைகளால் தானென்பதை உழவர்களிடையே வற்புறுத்தத்தான் தன்

சொந்த ஊரிலேயே மாதிரி மாடடுப்பண்ணை வைத்திருக்கின்றார். அக்காளைகளின் உடல்கட்டு குன்றாத முறையில் எவ்விதம் போஷிக்கப்பட்டுள்ளன என்பதை படத்தைப் பார்த்தே தெரிந்து கொள்ளலாம்.

புதிய வின்வித்கோவான தாமோதரசாமி நாயுடு, கால் நடைகளைப்பேணி விவசாய விருத்தியை உண்டாக்கும் முயற்சியை நாட்டின் நலனை விரும்பும் எவரும் போற்றாமலிருக்க முடியாது.

கலைவாணர் கிருஷ்ணன் "பார்முழுதும் ஏர்முனையிலே உழவன் பாட்டிலே கொண்டாட்டம் போடுது" என்று பாடிய பாட்டின் உண்மையை உணர்ந்த நாயுடு அவர்கள் விவசாய அபிவிருத்திக்காக கால் நடையைப்பேணும் முறையைக் கண்காட்சி மூலம் குடியானவர்களுக்கு எடுத்துக் காட்டுவது ஓர் நல்ல முறை.

விவசாயம் ஓங்குக! கால்நடைகள் பெருகுக!

தாமோதரசாமி நாயுடு வாழ்க!

ராவத்தூர். திரு R. N. அப்பாச்சிக் கவுண்டர் அவர்களால் போஷிக்கப்பட்டு வரும் "பொலி காளை" இது ஆண்டு தோறும் பரிசு பெற்று வருகிறது.

கல்வி முறையில்
★ கேள்வி முறையில்லையா? ★

தோழர் S. R. சுப்பிரமணியம்.

தோழர் S. R. சுப்பிரமணியம், திருப்பூர்.

ஒரு நாடு முன்னேற வேண்டுமானால் அந்நாட்டில் வதியும் மக்கள் கல்வியறிவுள்ளவர்களாகத் திகழவேண்டும். அக்கல்வியறிவும் நன்கு திட்டமிடப்பட்ட "கால் கோள்" மீது கட்டப்பட்டிருக்க வேண்டும். அப்படிக் கட்டப்பட்டிருக்கும் கல்வித்திட்டத்தினால் தான் அதாவது அக்கல்வியைப் பயிலும் மாணவர்கள் தான் எதிர்கால ஆக்க இளைஞர்களாக உலக அரங்கத்திலே ஒளி மணியென விளங்குவார்கள். இம்முறையில் தான் "கல்வி"த் திட்டங்கள் அமைத்திருக்கின்றனர் மற்றநாடுகளில் நம் நாட்டிலோ, அதிலும் சிறப்பாக நம் சென்னை மாநில அரசியலார் வகுத்துள்ள "கல்வி" புகட்டும் முறை அறிஞர் உலகு எண்ணி நகைக்கும் விதத்தில் அமைந்துள்ளது. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் நமது முன்னாள் கல்வியமைச்சர் அவர்களின் "கல்வி" க் கொள்கையோ அலாதியாயுள்ளது. அடிப்படைக்கல்வி (Basick Edugation) வார்தாக்கல்வித்திட்டம் ஆகியவைகள் தான் எழுத்தறியாமையைப்போக்க முடியுமென்று கனவு கண்டு வருகிறார் கல்வியமைச்சர். முதலில் வார்தாக்கல்வித்திட்டத்தை எடுத்துக் கொள்வோம் இதை இந்நாட்டு கல்வித்துறை நிபுணர்கள் என்று போற்றப்படும் ஆந்திர பல்கலைக் கழகத்துணை வேந்தர் டாக்டர் சர் C. R. ரெட்டி அவர்களும், காலஞ்

சென்ற திருச்சி தேசியக் கல்லூரித் தலைவர் பேராசிரியர் சாரநாதன் அவர்களும் தக்க காரணங்களோடு மறுத்தும், கண்டித்தும் எழுதியதை அதற்குள் யாரும் மறந்து இருக்க மாட்டார்கள்.

அடுத்தது "அடிப்படைக் கல்வி" யைத் தான் எடுத்துக் கொண்டாலும் அதில் சுய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளல் என்ற தத்துவம் அடங்கியிருக்கிறது என்று கூறுகிறார்களே தவிர அது எப்படிப்பட்ட சுயதேவை? அதனால் மக்களுக்கு ஏதாவது நன்மையுண்டா? என்பதை ஆராய்ந்து அலசிப்பார்க்க வேண்டும். இருபதாம் நூற்றாண்டில் அணுகுண்டு யுகத்தில் வாழ்ந்து கொண்டு சுய தேவைப் பூர்த்தி என்ற திட்டத்தில் தான் கழிக்கும் மலத்தை எந்த முறையில் எப்படிப்பட்ட இடத்தில் கழிக்க வேண்டும் என்றும், அதைப்பின்னர் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும், அதற்காக மலம் கழிக்கப் போகையில் கூட கையில் ஒரு மண் வெட்டியுடன் போவதின் அழகைப்பற்றியும் சொல்லியிருப்பதைப் பார்த்தால், படித்தால், மனம் புழுங்காமலிருக்க மாட்டான் கல்வித் துறையில் அக்கறையுள்ள எவனும். அது மாத்திரமல்ல ஆரம்பக்கல்வியை வளர்க்க வேண்டும். கட்டாயக் கல்வி முறையை அமுலுக்குக்கொண்டு வர வேண்டும். இவற்றை எல்லாம் நன்கு, செம்மையுறச் செய்வதற்கு ஆசிரியர்களின் மனக்குறையைப்போக்குவதற்கும் மார்க்கம் கண்டு பிடிக்க வேண்டும் என்றெல்லாம் தினசரி அறிஞர்கள் கதறிக் கொண்டிருக்கிறார்கள் அதெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாய் விட்டது. இத்தனைக்கும் மேலாக "இந்தி" மோகம் வேறு அவரைப்பிடித்துக் கொண்டு அலைக்கழிக்கிறது. பல "மொழி நூலறிஞர்"கள் இந்தி வந்தால் தென்னாட்டு நாகரீகம் கெடும், பண்பு பட்டுப்போய் விடும் என்றெல்லாம் எடுத்தெடுத்தோதி பார்த்தாய் விட்டது. அதற்காக "அறப்போர்" நடத்தி வருவது எல்லோருமறிந்ததே. இப்படி எல்லாம் கல்வித்துறையில் உலகத்தோடு ஒட்டிப்போகாமல் மனம் போனபடி செய்து கொண்டே போனால் இது இந் நாட்டை எந்நிலைக்குக் கொண்டுபோய் விடுமோ என்ற ஏக்கம் கல்வித்துறை நிபுணர்களுக்கு இன்று ஏற்பட்டு விட்டது நன்கு தெரிகிறது. ஆகையால் அரசியலாரின் "கல்வி"க் கொள்கை மாறினால் தான் மக்கள் அறிவுள்ளவர்களாக், எதிர்காலத்தில் சுதந்திர பிரஜைகளாக இந்நாட்டில் வாழ முடியும்.

அகில இந்திய பொருட்காட்சி, கோவை.

அகில இந்திய சுதேசி கலை, கைத்தொழில் பொருட்காட்சி கோவையில் நகரசபை உயர்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது.

சுமார் பன்னிரண்டு வருடங்களுக்குப் பிறகு பொருட்காட்சி கோவையில் நடைபெற்றது. சென்ற இரண்டு ஆண்டுகளில் பத்திரிகைகளை கவனித்துப்பார்த்தால் நன்கு தெரியும், எல்லா பெரிய ஊர்களிலும் பொருட்காட்சி நடைபெறுவது, பொருட்காட்சியின் பொதுவான நோக்கமே சுதேசிக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதும், தொழில் அபிவிருத்தியில் மக்களை அக்கரைகொள்ளச் செய்யவும், குடிசைத்தொழிலை வளர்ப்பதுமேயாகும். தொழில் மனப்பான்மை கொண்ட கோவையில் இதுநாள் வரை பொருட்காட்சி நடைபெறுமலிருந்து மிகவும் வருந்த வேண்டிய விஷயமே. ஆனல் திரு. கே ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் சிறந்த கலாபிமானி. அத்தகைய ஒருவர் துணிந்து, பொருட்காட்சியை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு திறம்பட நடத்தியதின் மூலம்தான் ஒரு சிறந்த நிர்வாகி என்பதையும் எடுத்துக் காட்டிவிட்டார்.

விளையாட்டு மைதானம் சிறிதாகவிருந்தாலும் கடைகள் எல்லாம் ஒழுங்காகவும், நேர்த்தியாகவும் அமைக்கப்பட்டன. காட்சிக்கு வரும் மக்கள் யாதொரு கஷ்டமுமின்றி இங்குமங்கும் உலாவவும் கடைகளில் நின்று வியாபாரம் செய்யவும் நிறைய இடமிருந்தது. சுமார் ஆயிரத்திற்கதிகமானபேர்கள் சௌகரியமாக உட்கார்ந்து கச்சேரிகளைக் கேட்கவும், நாட்டியத்தைக் கண்டானந்திக்கவும் சங்கீத மண்டபம் நிறுவப்பட்டிருந்தது.

பொருட்காட்சியில் குழந்தைகள் முதல் வயோதிகர்வரை உபயோகிக்கத் தகுந்த பொருள்களுள்ள கடைகள் வைக்கப்பட்டிருந்தன. விளையாட்டு சாமான்கள், பலூன்கள் உட்பட, கைத்தடி பிரம்புக்கடைவரை பலதரப்பட்ட கடைகள் காணப்பட்டன. பொருட்காட்சியில் பெண்களுக்கான விஷயங்கள்தான் நிறைந்தது. முதன் முதலில் அவர்களைக் கவர்வது ஜவுளிக்கடைகள்தான். கடைவீதியிலுள்ள ஜவுளிக்கடைக்கும், பொருகாட்சியிலுள்ள கடைக்கும் என்ன வித்தியாசம் என்ருல், பொருட்காட்சியில் மலிவான விலையில் விதவிதமான வகைகளில் ஜவுளிகள் வைக்கப்பட்டிருந்தன. சமீப காலங்களில் பிரசித்தி பெற்றுள்ள ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் பாத்திரக் கடைகள் பெண்கள் மனதை அடுத்தபடி கவர்ந்தன. மற்றும் நகைக் கடைகள், வாசனை திரவியக் கடைகள், பூ வேலைக் கடைகள் ஆகியவற்றிற்கும் விஜயம் செய்யாமல் விடுவார்களா ?

பொதுவாகவே சர்க்கார் இலாக்காக்களும் பொருட்காட்சியில் கலந்து கொள்வதென்பது சம்பிரதாயமாகிவிட்டது. கால்நடை பகுதி, கோழி வளர்ப்பு, உணவு உற்பத்தியை அதிகரித்தல், வைத்தியப் பகுதி, சிறு சேமிப்பு திட்டப் பகுதி ஆகியவைகளும் இருந்தன. 'ரத்த பாங்கி'யின் ஸ்டாலுக்கு பெரும்பாலான மக்கள் விஜயம் செய்தனர்.

போலிகளுக்குக் கூட ஒரு கடையிருப்பது விசேஷமானது. வேறென்றுமில்லை. அரசவேடமானாலும், ஆண்டி வேடமானாலும் சரி கமண்டலம் முதல் கிரீடம் வரை எல்லாம் கிடைக்கின்றன இக்கடையில்.

மற்ற எந்த ஊருக்கும் கிடைக்காத ஒரு சௌகரியம் கோவைக்கு உள்ளது. தொழில் வளர்ச்சில் அக்கரை கொண்டவர்களும் இயந்திரம் என்றாலே இயற்கையாகவே பிரியமுடையவர்களும் கொண்ட ஊர் இது. அப்படியிருக்கையில் மக்கள் இயந்திரங்களிருக்கும் கடைகளை விட்டு லேசில் நகருவதில்லை என்பதில் நியாயமிருக்கத்தானே செய்கிறது.

பி. எஸ். ஜி. ஸ்தாபனத்தார் விவசாயக் கருவிகள் வைத்திருக்கும் பகுதியும், தண்டாயுதபாணி பவுண்டரியாரும் பம்பு செட்டுகள் பொருத்தி தண்ணீர் இறைக்கும் முறையைக் காட்ட ஏற்பாடு செய்துள்ளதையும் எல்லா விவசாயிகளும் அவசியம் காணவேண்டிய அம்சங்களாக இருந்தது.

கங்காதேவி பூமியில் எங்கு ஒளிந்திருந்தாலும் துருவிக் கண்டுபிடித்து வெளிக்கொணரும் இயந்திர பகீரதனை நாம் பொருட்காட்சியில் நேரில் காண முடிந்தது. இதை எற்பாடு செய்திருந்தவர்கள் பார்ம் எக்விப்மெண்ட் ராதாபவுண்டரி கம்பெனியாளர்கள். மற்ற பல பெரும் வேலைகள் செய்யும் சிறு இயந்திரங்களும் கார்லிக் கம்பெனியிள் இருந்தன. வழவழப்பான கூடங்கள் அமைக்கவும், அழகான கூறைகள் அமைக்கவும் சலவைக் கற்களும், கூறையோடுகள் கடைகளும்கூட இருந்தன. விஜயம் செய்பவர்களின் ருசி ஒரே மாதிரியாய் இருப்பதில்லை பாருங்கள்! சிலருக்கு புத்தகங்கள் வாங்கத்தோன்றும், சிலருக்கு அதிசய பிறவிகள் போன்றவைகளைக் காணவேண்டும், வேறு சிலருக்கு மெழுகு பொம்மை போன்றவைகளைக்காணும் ஆவல் ஏற்படலாம். அவரவர்கள் ருசிக்கேற்றவாறு விதவிதமான கடைகள் கைக்கப்பட்டிருந்தன. அப்பாடா! ஒரு மாதிரியாக பொருட்காட்சியை சுற்றிப் பார்த்தாகிவிட்டாது. தாக சாந்திக்கு என்னசெய்யலாம் என திரும்பிப் பார்க்கையில் ஐஸ்கிரீம் ஸ்டால் கண்ணில் பட்டது. அதை சாப்பிட்டுக் கொண்டிருகையில் டொக் டொக்கென்று தம்பட்ட வாத்தியம் கேட்டது. விசாரித்ததில் பொய்க்கால் குதிரை நடனமெனத்தெரியவந்தது காசு கொடுத்துக் கேட்க கச்சேரியுண்டு, ஆனல் மற்ற பொது மக்களுக்கொன்றும் வேண்டாமா? இதையுணர்ந்துதான் இலவச பொழுது போக்குகளுக்கும் நிர்வாகிகள் ஏற்பாடு செய்திருந்தனர். கோவை எக்ஸிபிஷன் அதன் நிர்வாகிகளுக்குப் பிரமாதமான வெற்றி என்று தான் சொல்ல வேண்டும்.

— தோழன்.

மகிழ்ச்சி என்பது வீரத்தின் ஒரு சாயல்.

— ஜாங்ஷன்.

காதலுக்கு பலி!

A. G. சுந்தரராஜன் எழுதியது

"சார் நான் செய்தது எனக்குக் குற்றமாகத் தோன்றவில்லை. உங்கள் மனதில் குற்றமாகப்பட்டால் என்னை எது வேண்டினும் செய்யலாம்" என்றான் தியாகராஜன்.

தியாகராஜன் நல்ல பையன், ஒழுங்கானவன், என்பதே இன்றும் என் அபிப்பிராயம். பரம்பரைப் பணக்கார குடும்பத்தில் பிறந்தவன். சிறுவயதிலேயே தன் தகப்பனை இழந்து தாய்க்கு ஆறுதல் அளிக்கும் ஒரே மகனாக இருந்து செல்வமாக வளர்ந்து வந்தான். எல்லாப் படிப்பையும் கோவையிலேயே படித்து விட்டு, மேல் படிப்புக்காக சென்னைக்கு வந்தான். அந்தக் காலேஜின் பிரின்சிபலான என் முன்பு முதன் முதலாக அவன் வந்த போதே எனக்கு அவன் மேல் நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டது. இக்கதை எழுதும் போது கூட அவனை நினைத்தால் என் கண்ணிலிருந்து கண்ணீர் பெருகி என் சிந்தனையைத் தடுக்கிறது.

ஃ ஃ ஃ

அன்று காலை காலேஜுக்குள் நுழைந்து என் ஆபீசினுள் நுழையுமுன்பே, என்னைத்தொடர்ந்து மனோஹரன் நுழைந்தான். பள்ளிக்குள் நுழைந்ததும் இவன் முகத்தை யா பார்ப்பது என்று எண்ணிக்கொண்டு........

"என்ன விசேஷம்?" என்றேன் அவனை சீக்கிரம் வெளியிலனுப்புவதிலேயே என் கவனம் நிலைத்திருந்தது பிறகு...........!

அவன் சொன்ன கதையைக் கேட்டதும் எனக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. நான் மதிப்பாக நினைத்துக் கொண்டிருக்கும் ஒரு ஆசாமி இப்படி நடந்து கொள்வான்

என நான் கனவிலும் எண்ணவில்லை. "தியாகராஜனை அழைத்து வா" எனப் பியூனை நோக்கி இறைந்தேன் "சரி மனோஹர் நீ போகலாம்" என சொல்லிவிட்டு, அவன் சொன்ன கதையைப் பற்றி சிந்தனை செய்து கொண்டிருந்தேன்.

"சார் நமஸ்காரம்" என்ற மொழிகள் என் சிந்தனையைக் கலைத்தது. நிமிர்ந்துபார்த்தேன் அங்கு தியாகராஜன் நின்று கொண்டிருந்தான். "தியாகராஜ், நீ நேற்று மனோஹரனுடன் நடந்து கொண்டது மிகவும் வருந்தத் தக்கது" என்றேன் அப்போது தான் தியாகு, கதையின் ஆரம்பத்தில் கூறியதைப்போல் தன் நிலையை எடுத்துக் கூறினான். "சரி நடந்த விஷயத்தை உள்ளது உள்ளது போல் சொல்" என்றேன்.

தியாகு தன் கதையைத் தொடர்ந்தான்.

"வகுப்பில் நான் எப்படி நடந்து கொள்வேன் என்பது உங்களுக்குத் தெரியும் நீயுண்டு உன் பாடமுண்டு என்று இருப்பேன் என நீங்களே புகழ்ந்திருக்கின்றீர்கள். இப்படி அமைதியாக சென்று கொண்டிருந்த என் பரிசுத்தமான வாழ்க்கையில் கமலா குறுக்கிட்டாள்.

கமலாவை உங்களுக்குத் தெரியும் என்னுடன் படிக்கும் மாணவி. அன்று அசந்தர்ப்ப வசமாக திரும்பிப் பார்த்த என்னைப் பார்த்து, அவள் புன்னகைபுரிந்தாள்.

எனக்கொன்றும் புரியவில்லை. அவளைப்பற்றி மாணவர்கள் பலவிதமாகப் பேசிக்கெள்வார்கள். நான் அதை எல்லாம் பொருட்படுத்தாது பள்ளியை விட்டுச் சென்றேன்.

இதே சிந்தனையில் லயித்திருந்த என் மனதை மாற்ற பீச்சுக்கு சென்றேன். நான் எதற்கு பயந்து அங்கு சென்றேனே அது அங்கேயும் வந்து பிடித்துக்கொண்டது.

கமலா, நான் அமர்ந்திருந்த இடத்தை நோக்கி வந்தாள் பிறகு அதிகமாகச் சொல்வானேன். அவள் வீசிய வலையில் வீழ்ந்தேன் நான், பல எதிர்கால இன்பக் கனவுகளைப்பற்றி பேசிக்கொண்டிருந்து விட்டு வெகு சந்தோஷமாக என் அறைக்குத் திரும்பினேன்.

என் சந்தோஷம் தலைகால் புரியவில்லை பெய்ந்து கொண்டிருந்த மழையையும் எதிர்த்து சினிமாவுக்குப் போனேன்.

சினிமா இரவு 1 மணிக்கு முடிந்தது அந்த நேரத்தில் பஸ் கிடையாது நடையைக்காட்டினேன் கொஞ்ச தூரம் தான் போயிருப்பேன் என் பினனே ஏற்பட்ட சிரிப்பொலியைக் கேட்டு திரும்பிப்பார்த்தேன். “என்ன ஆச்சரியம்! மாலை அவ்வளவு பேசிய கமலாவா அது?” எனக்கொன்றும் புரியவில்லை “கமலா” என்றழைத்தேன். அவளுக்கு பதில் அவளருகில் அவள் மேல் கையைப்போட்டுக்கொண்டிருந்த ஆசாமி திரும்பினான் அவன் யாருமில்லை மனேஹர்! எனக்கு வந்த கோபத்தை இப்போது எடுத்துக்கூறமுடியவில்லை. கோபம் எல்லை மீறியது. மனேஹரை நையப்புடைத்து விட்டு வீடு திரும்பினேன். போகும்போது எவ்வளவு சந்தோஷமாகப் போனேனே அவ்வளவு கவலையாக, ஏமாற்றமாகத் திரும்பினேன். பிறகு காலையில் எழுந்து நடைப்பிணம்போல் காலேஜுக்கு வந்தேன். வழியிலேயே நீங்கள் அழைத்ததாகச் சொன்னார்கள் நேரே உங்கள் அறைக்கு வந்தேன். அவ்வளவு தான் நடந்தது என்று முடித்தான் தியாகு. “தியாகராஜ் உன்னைப்பற்றி எவ்வளவோ நல்ல அபிப்பிராயம் இன்றும் வைத்துள்ளேன் ஆனல் உன் கவலையை, ஏமாற்றத்தை மாற்ற எனக்கும் மனமிருக்கிறது.... ஆனல் மார்க்கமில்லை விதி அப்படியுள்ளது. நான் உன்னையும், உனக்கு இந்த நிலையைத் தேடித்தந்த கமலாவையும் காலேஜிலிருந்து நீக்குகிறேன் நீ போகலாம்” என்றேன்.

தியாகராஜன் வெளியே போனன் பாவம்! நேற்றைய விஷயம் அவன் படிப்புக்கே முற்றுப்புள்ளி வைத்து விட்டது எனக்கு அன்று வேலையே ஓடவில்லை. மூவரையும் கூட்டி சமாதானம் செய்யலாமா? என்றுகூட யோசித்தேன். மாலை வீடு திரும்புவதற்குள் ஒரு யுகம் போல ஆய் விட்டது.

மறுநாள் காலை அநேகமாக பழைய சம்பவங்களை மறந்து விட்டு காலை வந்த பேப்பரை எடுத்துப்புரட்டினேன் "என்ன ஆச்சரியம்!" கீழ்க்கண்டபடி வெளியான செய்தி என்னை துக்கக்கடலில் ஆழ்த்தியது.

காலேஜ் மாணவன் தற்கொலை!

பி. ஏ. வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாராம்.

நேற்று இரவு ஒரு மணிக்கு மரீனக் கடற்கரையோரமாக ரோந்து வந்துகொண்டிருந்த நகரப் போலீஸார் ஒரு மாணவனின் பிரேதத்தைக் கண்டெடுத்தனர். அவரிடமிருந்த அடையாளங்களின் மூலம் பிரஸிடென்ஸி காலேஜில் பி. ஏ வகுப்பில் படித்துக்கொண்டிருப்பவரென றும், பெயர் தியாகராஜனென்றும் தெரிய வருகிறது போலீசார் மேற்கொண்டு புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

கதைகளில் வரும் பெயர்கள்யாவும் கற்பனையே.

ஸ்ரீ திரிபுர சுந்தரி விலாஸ்

காபி கிளப்

(U. M. S. பஸ் ஸ்டாண்டுக்கு எதிரில்)

கோயமுத்தூர்.

★ சுவைமிக்க

ஆனல் நறுமணங்குன்ருத

★★ கவின்மிக்க

தின்ருலும் தெவிட்டளிக்காத

★★★ ருசிமிக்க

அன்ருடம் புத்தின வெண்ணையுருக்கிய

நெய்யினல் செய்யப்பட்ட காரம், இனிப்பு முதலிய அறுசுவை பண்டங்கள் யாவும் இணையில்லாதவை. ஸ்பெஷல் ஆர்டர்களை சீரிய முறையில் செவ்வனே உடனடியாக கவனிக்கப்படும்.

Pro:- **P. S. வெங்கடேஸ்வரன்.**

— சந்தா நேயர்களுக்கு. —

(1) நமது "கோவை முரசு" பத்திரிகை தவக்கத்திற்கு காரணம் சொந்த அச்சகம் இல்லாமை.

(2) நமது ஆசிரியர் அவர்கள் பத்திரிகைக்கு ஆக்கம் தேடும் வகையில், மாநில முழுதும், சுற்றுப்பிரயாணம் செய்ததில், உடல் நிலை சரி இல்லாமை.

(3) நமது சந்தா நேயர்கள் 400க்கு மேற்பட்டவர்கள், சந்தா அனுப்பி வைப்பார்கள், என்ற நம்பிக்கையின்பேரில் ஓராண்டு பத்திரிகை அனுப்பியும், சந்தா தொகையை அனுப்பாமை.

(4) நமது சினிமா கலைஞர்கள் ஆறு பேர் ரூ. 600—0—0 கொடுப்பதாக வாக்குறுதி தந்தும் அவர்களைப் பற்றிய விளம்பரங்கள் செய்தும் அதற்கு நாளது வரை பணம் கொடுக்க இயலாமை.

(5) இப்படைத் தோற்றால் வேறு எப்படை ஜெயிக்கும்? என்பது அறிஞர் அண்ணா கூறிய வாக்கு அதை சிரமேற்கொண்டு இனி எத்தகை இன்னல்கள் வந்துற்றபோதும், கடமையைக் கலங்காது 'முரசு' தொடர்ந்து வெளிவரும். காலப்போக்கில் எல்லா அம்சங்களை யும் ஏற்று சிறந்த முறையில் வெளிவருமென மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

— ஆசிரியை.

கோவைச் செய்திகள்.

... குறள் விழா. ...

கோவை இராமனுதபுரம் நகராட்சித் துவக்கப்பள்ளியில் 15—1—50 தேதியில் மாலை 4 மணிக்கு

திரு. C. S. ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் திரு. S. V. அப்பாச்சி அவர்கள் நீண்டதோர் வரவேற்புரை நிகழ்த்தினர்.

திருக்குறள் முனிசாமி, திருச்சி கி. ஆ. பெ விசுவநாதம் அவர்களும், குறளைப்பற்றி அறியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள்.

செயளாளர் மூ. மா. சண்முக சுந்திரம் வந்தனோபசாரம் சொல்ல குறள் விழா இனிது முடிந்தது.

விளம்பர போர்டுகளும், சினிமா சிலைடுகளும், டிசைன் களும், சினிமா பேனர்களுக்கும் ஏற்ற இடம்

★ **சாமி பெயிண்டிங் ஒர்க்ஸ்,** ★

வெறைட்டி ஹால் ரோடு, கோயமுத்தூர்.

சினிமா நடிகர்

- M. K. முஸ்தபா -

"இவர் ஜுபிடரின்" பல படங்களில் நடித்துள்ளார். ஆனல் இவர் தகுதிக்கேற்ற நடிப்புகள் கொடுக்கப்படுவதில்லை காரணம் யாதோ நாமறியோம். சிறந்த நடிகர் நல்ல முகத்தோற்றமும் உடலமைப்பும் உடையவர் எந்த நடிப்பையும் திறம்பட நடிக்கும் ஆற்றல் பெற்றவர். என்பதை நாமறிவோம் அன்பு இதயமுடையவர். அவர் கலை வாழ்க்கை வெற்றிபெறுவதாகுக.

எல்லாவித உயர்ந்த இங்கிலிஷ் மருந்துகளும் ★ ★ ★

★ ★ ★ சரசமான விலைக்குக் கிடைக்கும் இடம்!

V. சுப்ரமணியம் & கோ

★

இங்கிலீஷ் மருந்து ஷாப்

249, ராஜவீதி, கோயமுத்தூர்

அனைவருடைய அன்பையும்,
ஆதரவையும், கோருகிறோம்.

ஊதியமுள்ள அனுகூலமான
பிரதிநிதித்துவத்திற்கும் குடும்ப பாதுகாப்பிற்கும்

இந்தியா லைப் பெனிபிட் அஷ்யூரான்ஸ் சொஸைடி, லிட்.,

தலைமை ஆபீஸ்:- கோயமுத்தூர்.

தமிழ் நாட்டில் சென்ற 15 வருடங்களாக
திறமையுடன் சேவை செய்து வரும்
ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் ஸ்தாபனம்

★

31-12-45 முடிய கணிதப்
பரிசோதனையில் போனஸ் பிரிவினை

ஜீவிய பாலிசுக்கு : ரூ. 40-0-0

எண்டௌமெண்டு
பாலிசுக்கு : ரூ. 30-0-0

விபரங்களுக்கு தலைமை ஆபீசுக்கு எழுதவும்

ஸ்ரீ T. A. ராமலிங்கம் செட்டியார்,
(அரசியல் நிர்ணய சபை அங்கத்தினர்) தலைவர்.

M. S. பழனியப்ப முதலியார், B. A.,
மானேஜிங் டைரக்டர்.

C. R. சிவசுப்ரமணியம், B. A.,
செக்ரடரி.

பெங்களூர் பிரியாணி ஓட்டல்,

(டவர் கிளாக்குக்கு எதிரில்)

கோயமுத்தூர்.

ஆரம்ப நாளிலிருந்து, இந்நாள்வரை அப்பழுக்கின்றி சுகாதார முறையோடு சுவை குன்றாத வகையோடு தயாரிக்கும் உணவு வகைகளுக்கு ஒப்பற்ற உணவு விடுதி இது ஒன்றே.

Pro:- K. S. G. சாமி,
ராஜவீதி, கோவை.

மைசூர் பிரியாணி & சாப்பாடு ஓட்டல்,

பெரியகடை விதி, கோவை.

அகில இந்திய சோஷியலிஸ்ட் தலைவர் ஸ்ரீஜத். ஜெயப்பிரகாஷ் நாராயணனால் போற்றிப் புகழப்பட்ட ஒப்பற்ற உணவு விடுதி. நாவிற்கு ருசி! நல்ல மணமுள்ள பதார்த்தம்.

சுகாதார முறைப்படி தேன் சுவைதரும் உணவுகள். இவற்றிற்குப் புகழ்வாய்ந்த இணையிலா உணவு விடுதி.

ஓர் முறை விஜயம் செய்யுங்கள்.

உரிமையாளர்:— R. N. G. & G. P. R,

காரல், கசப்பு இல்லாத குணம், மணம் நிறையப் பெற்ற

'நரி மார்க்' சுபஹான் பீடிகளை

கவனித்து வாங்கவும்.

Regd. No **4351.**

புரோப்:— P. M. சுபஹான் சாயபு, பல்லடம்.

ஏஜண்டு:— P. A. K. சோமசுந்தரம் செட்டியார், பலலடம்.
பாவாஜான் சாயபு, பல்லடம்.
S. சையத் ரசூல் சாயபு, பல்லடம்.
அங்கணத் தேவர், இருகூர்.

★ நன்கொடை ★

நமது பள்ளித்தோழரும், கெழுதகை
நண்பரும், **C. C. Brothers** பஸ்
சர்விஸ் [சூலூர் *To* கோவை] உரிமை
யாளருமான திரு Y. C. சந்திரசேகரன்
அவர்கள் பத்திரிகை வளர்ச்சிக்காக
ரூ 100 நன்கொடை உதவியுள்ளார்.
அதற்காக எம் ஆழ்ந்த நன்றிகள் பல.

— ஆசிரியர்.

உறுதியோடும், நாகரிக வேலைப்பாடும் அமைந்த
பித்தளை பாத்திரங்களுக்கு தென்னாட்டிலே
தலைசிறந்த இடம்,

K. இராமச்சந்திரன்,

பாத்திரக்கடை

பெரிய கடை வீதி, ★ கோயமுத்தூர்.



M. M. A. சின்னப்பா, அவர்கள் ராஜகுமாரி, மோகினி, "விஜயகுமாரி" முதலிய ஜூபிடர் படங்களில் மல்யுத்தம், சிலம்பம், குத்துச் சண்டைகளில் தனது 500 சிஷ்யர்களுடன் கலந்து நடித்து அநேகரின் பாராட்டுதலைப் பெற்றுள்ளார். இதர ஸ்டுடியோக்காரர்கள், தனிப்பட்ட புரட்யூஸர்களின் படங்களிலும் அவரது சகாக்களுடன் நடிக்க சித்தமாக இருக்கிறார் தேவையுள்ளோர் பயன்படுத்திக் கொள்க. வீரமாருதி தேகபயிற்சி சாலை, ராமனாதபுரம், கோவை.

பாபுலர் ஸ்டோர்ஸ்,

"காவேரி பிராண்டு" கலப்பு உரம் ஏஜண்டு

பல்லடம்.

எங்களிடம் விவசாயிகளுக்குத் தேவையான
"காவேரி பிராண்டு" கலப்பு உரமும், எலெக்ட்ரிக் மோட்டார்
பம்பு செட்டுகளும், வீடுகளுக்குத் தேவையான
எலெக்ட்ரிக் லைட் சாமான்களும் குறைந்த விலையில்
கிடைக்கும்.

சிங்காநல்லூர் "ஈஸ்டர்ன் எலெக்ட்ரிக்" கம்பெனி
பம்பு செட்டுகள் எங்களிடம் கம்பெனி விலைக்கே
கிடைக்கும்.

கோபால் பீடிகள்
TRADE MARK.
REGD No 590
ரிஜிஸ்டரான
A. K. அஜீஸ்
கோயமுத்தூர்

குணத்தில் சிறந்தது கோபால் பீடி !
மணத்தில் மிகுந்த கோபால் பீடி !!
தமிழ் நாட்டில் இணையில்லாக்
கோபால் பீடி !!!

சிகரெட் பிடிப்போர் அவசியம் உபயோகிக்கத்தக்க
குணமுடையது.

உரிமையாளர்:

A. K. அஜீஸ் சாயபு,

கோபால் பீடி பேக்டரி,

... **மங்கலம் ரோடு, பல்லடம்.** ...

ஏஜண்டுகள்; ஜனப். K. தஸ்தகீர் சாயபு, தாராபுரம்.
,, K. முகமதுஷா சாயபு, காங்கயம்.
,, U. A. பாச்சாமியா சாயபு, உடுமலைபேட்டை
,, P. N. பீர்முகமது சாயபு, பழனி.

‘அசோகா’
ஸ்பெஷல்
பைப்பிங் லேஸ்கள்.

இப்பொழுது விலையுயர்ந்த மெல்லிய ரகத்துணியில் தயாரிக்கப்பட்டு ஏராளமாக எல்லா இடங்களிலும் விற்பனையாகி வருகிறது. அசோகா ஸ்பெஷல் பைப்பிங் லேஸ்கள் என்று கேட்டு வாங்கும்படி கோறுகிறோம்.

கோவை ஏஜண்டு: நாவல்டி ஸ்டோர்ஸ், பெரியகடை வீதி, கோவை.

தயாரிப்பவர்கள்:— அசோகா இன்டஸ்ட்ரீஸ், ஈரோடு.

RAJU FOOT WEAR
BIG BAZAAR ★ COIMBATORE.

★ நம்பிக்கை! ★ நாணயம்!! ★ உறுதி!!!

★ உயர்ந்த மிதியடிகள் ★

கான்பூர் சூஸ் வகையருக்கள். நவீனம், அழகு ஒருங்கே அமைந்தது விலையில் சரசம். ஒருமுறை வாங்கி உபயோகித்தால் உண்மை விளங்கும்.

ராஜு பூட்வேர் ஹவுஸ், பெரியகடை வீதி, கோயமுத்தூர்.

சாரதா விலாஸ் காப்பி ஓட்டல், சூலூர்.

நாவிற்கு ருசியும், மணத்திற்கு திருப்தியும், அளிக்க வல்ல, தித்திப்பு, காரம் போன்ற எல்லாவிதமான பலகாரங்களும், நெய்யினால் தயார் செய்கிறோம். சுத்தமாகவும், சுவைமிகுந்தவையாயும், தயாரிக்கிறோம்.

டீ பார்ட்டி போன்ற பெரிய ஆர்டர்களை குறிப்பிட்ட காலத்தில் செய்து தருகிறோம்.

புரோப்ரைட்டர்: V. ரத்தினம் ஐயர்

அநேக விதமான கடிகாரங்கள்
டைம்பீசுகள் சுவர் கடிகாரங்கள்
... ஏராளமாய் வந்துள்ளன ...





கடிகார ரிப்பேர் குறைந்த சார்ஜில் செய்து கொடுக்கப்படும்.
கடியாரங்களுக்கு வேண்டிய எல்லாவிதமான பாகங்களும்
— எங்களிடம் எப்பொழுதும் ஸ்டாக் உண்டு. —

P. K. மீரான் அண் கோ.

பெரியகடை வீதி, :: கோயமுத்தூர்,

மலபார்
மாடர்ன் ஆட்டோமோபைல்ஸ்,

(*H. O.* பாலக்காடு)

பழைய போஸ்டாபீஸ் ரோடு, கோயமுத்தூர்.

சவர்லெட், போர்டு, லாரிகளுக்கு வேண்டிய
ஸ்பேர் பார்ட்சுகள், டயர்கள் மற்றும்
எல்லா மோட்டார் ஸ்பேர்பார்ட்
களும் எங்களிடம்
கிடைக்கும்

Prop: V. G. மேனன்.

தென்னிந்தியாவில் புகழ் பெற்ற

பல்லடம் குயில் மார்க் பீடிகள்

உபயோகத்திற்கு உகந்தது
குணத்தில் சிறந்தது
குயில் மார்க்கென
கூவு குயிலே

குணத்திலும் சுவையிலும்

மணத்திலும் சிறந்தது

Prop: P. A. ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்டு:- K. அய்யாசாமி செட்டியார், திருப்பூர்
அமீர் சாயபு, உடுமலைப்பேட்டை
K. மம்முசா சாயபு, காங்கயம்
S நடராஜ முதலியார், அவினாசி

Edited & Published by S. P. Meenakshi Ammal, Sulur.
Printedby Sri Kathiresan Press, Coimbatore.
Mg. Editor : S. A. Manickam.

WOODLANDS HOTEL

A PROBLEM SOLVED: **AT COIMBATORE:**

Please visit our New Residential Hotel at The Art's College Road Coimbatore :: South India

Rooms with Attached Baths and Modern Sanitation:

COTTAGES
FAMILY ROOMS
SINGLE ROOMS

Fully Furnished, Airy And self Contained:

Wire:
"WOODLANDS" Coimbatore or Phone: 373 A.

WOODLANDS HOTEL.

THE GARDEN HOTEL OF THE SOUTH

MADRAS 14. PHONE; 86461.

KOVAI MURASU Regd. No. M. 5064.

தந்தி: ராஜா.

சுவர்ண மாளிகை

போன் 268

தபால்பெட்டி 139.

பி. ஏ. ராஜு செட்டியார் & பிரதர்

வைர வியாபாரிகள்

கோயமுத்தூர்

ஸ்ரீ கதிரேசன் அச்சகம் கோவை,